"மலைநாடு மலைநாடு
என்று பாடுவோம்—மலை
முரசறைந்து மலைமக்கள்
வாழ்வுயர்த்துவோம்"

மலை முரசு

சிறப்பாசிரியர் :-
மலைநாட்டு எஸ். நடேசன்.

கூட்டாசிரியர்கள் :-
க. ப. சிவம்
மு. கு. ஈழக்குமார்.

முரசு 1 | கண்டி, நவம்பர் - டிசம்பர் 1962 | முழக்கம் 11—12

# செஞ்சீனாவின் நயவஞ்சகம்—சனநாயகத்துக்கு சாவுமணி!

பாருக்கெல்லாம் சாந்தியை, சமாதானத்தை, அன்பை, அறத்தை எடுத்தோதி, அதன் மூலம் மக்கள் குலத்துக்கே சமாதான வழிகாட்டியாய் விளங்கிய பாரதநாடு, இன்று போர் வெறி கொண்ட கொடுமதியாளர்களாம் — செஞ் சீனர்களின் படையெடுப்புக் சாளாகியுள்ளதைக் கண்டு பார்முழுதும் வேதனைக்குள்ளாகியுள்ளது.

எப்பொழுதோ தீர்க்கப்பட்டுவிட்ட சீன-இந்திய எல்லைப் பிரச்சினையை, மீண்டும் தீர்க்கப்படவில்லை என மறுத்து, அந்தச் சாட்டில் பாரதத்தை கொஞ்சங்கொஞ்சமாக விழுங்க வேண்டும் என்ற மண்ணாசை கொண்ட செஞ்சீனா, இந்தியாவின் நண்பனைவே நடித்துக் கொண்டு நாடு பிடிக்க முனைந்துவிட்டதை நானிலம் இப்போது காண்கிறது.

எல்லைப் பிரச்சினையில் தொல்லை கொடுப்பது எங்கள் நோக்கமல்ல என்றும், சமாதானமே பொதுவுடமைத் தத்துவம் என்றும் சொல்லிக்கொள்ளும் சைனா இந்திய எல்லையில் லட்சோப லட்ச துருப்புக்களைக் குவித்து வைத்துக்கொண்டு தனது வெறியாட்டங்களைக் காட்டி இந்திய மண்ணில் பெரும் பகுதியைக் கடந்த ஒரு மாதத்தில் பிடித்துக்கொண்டு வருவதைப் பார்க்கும் போது, பொதுவுடமை என்பதும், சமாதானமென்பதும், இந்தியாவை ஆக்கிரமிப்பதென்பது தான் என்ற கருத்தோ என ஐயுறுகிறோம்

வெறும் எல்லைத் தகராறு என்ற உருவிலே புகுந்து இந்தியாவையே தங்கள் ஆதிக்கத்திற்கு அடிமைப் படுத்த வேண்டும் என்ற ஏகாதிபத்திய வெறியில் தான் இந்தக் கோர யுத்தத்தை சைனா தொடுத்திருக்கிறது என எண்ணுமளவிற்கு அவர்களின் போக்கு அமைந்து விட்டது.

செஞ்சினாவின் இந்த வஞ்சகச் செயலானது, உடனிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் கொள்கைக்கே உலைவைப்பதோடு, சமதர்மத்திற்கும் சனநாயகத்திற்கும் சாவுமணியடிப்பதாகும். நேசக் கரங்களைத் துண்டித்து தனது நாசச் செயல்களால் நாடு பிடிக்கும் நயவஞ்சகமே செஞ்சீனாவின் நோக்கம் என்பது புலனாகிவிட்டது. இரத்த வெள்ளத்திலும், பிணக் குவியல்களிலும் தான் தனது ஆதிக்க வெறியைத் தணித்துக் கொள்ளலாம் என செஞ்சீனா கருதுமானால் அவர்கள் இதை மறக்கவே மாட்டார்கள் எனக் கருதுகிறோம்.

> "எதிரிக்காக நீ தூண்டி வளர்க்கும் நெருப்பு எதிரியை எதிர்ப்பதைவிட, உன்னையே அதிகம் எரித்துவிடும்"
>
> சீனப் பழமொழி.

செஞ்சீனப் படுகொலையாளர்களை எதிர்த்து தனது தன்மானத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட, பாரதம் எடுத்து வரும் நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் பாரதமாதாவின் புதல்வியாகிய ஈழ மண் மாதாவின் மக்கள் அனைவரும் ஆதரிப்பதோடு அநீதியை அழித்தொழிக்க ஆவன செய்யவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் காட்டும் அனுதாபத்திலிருந்தே தெரிந்துகொள்ள முடிகிறது.

அநீதியை அழித்து அறத்தை நிலைநாட்டும் பணியை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிட்டினால் அப்பணியை அன்புடன் ஏற்று முதலணியில் நிற்க ஆயிரமாயிரம் மலையக மக்களும் தயார் எனக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

இரத்தவெறி பிடித்தலையும் செஞ்சீனா பாரத எல்லைக்குள் நடாத்தும் தனது கோரச் செயல்களை உடனடியாக நிறுத்தாவிட்டால் உலக மக்களின் உள்ளக் குமுறலுக்குப் பதில் சொல்லும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதை உணரட்டும்.

---

**இவ்விதழ் அட்டைப்படம்:—**

பெ. கந்தசாமி. மலைநாட்டுக் கலைவிழா, சிவசக்தி நடனம், பதுளை.

* * *

கடந்த இதழில் வெளிவந்த புகைப்படங்கள் யாவும் புகைப்படக் கலைஞர் கண்டி

**எஸ். சிவலிங்கம் அவர்களுடையவை.**

---

மலைநாட்டுக் கலைவிழாவில் நடைபெற்ற சிவசக்தி நடனம்.
படப்பிடிப்பு: பெ. கந்தசாமி.

---

(மலைமுரசில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள், யாவும் கற்பனையே. அவை எவரையும் குறிப்பிடுவன அல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவம் செத்தது !

— சழக்குமார் —

வெறிகொண்ட சொறிநாயாய் 'பொதுவுடைமை
வழியினிலே செல்கின்றோ' மென்றுகூறி
நெறியின்றி பிறர்வாழ்வை பறிக்கும்கீழ்
நீசமிகு எண்ணத்தைக் கொண்டுஇன்று
குறிவைத்து இந்தியாவைத் தாக்குகின்ற
'கம்யூனிஸ்ட்' சீனர்களின் ஆக்ரமிப்பு
அறிவுலகம் கண்டஉயர் தத்துவத்தின்
அழிவுக்கு வழியமைக்கும் கொடுஞ்செயலாம் !

பொதுவுடைமை என்பதெலாம் உதட்டளவில்,
பேசுகின்ற சொல்லளவில் தானோ ?அன்றி
எதுவுமே தன்னிச்சை போலபிறர்
இல்லத்தை சுரண்டிவிட முயன்றுகொடுஞ்
சதிசெய்து சத்தியத்தை அழித்துஉயர்
சுதந்திரத்தைப் பறித்திடுதல் தானோ? இதில்
எதுஇல்லை சீனரிடம் ? வளர்ந்துவிட்ட
இந்தியாவைக் கொள்ளையிட முனைகின்றார் !

ஒட்டிஉற வாடிநின்றார் சனநாயக
உயர்வினையும் பேசிநின்றார்; உண்மையென்று
பட்டினிக் குணவளிக்க தன்னுணவைப்
பகிர்ந்தளிக்க மனங்கொண்ட இந்தியாபால்
கொட்டிவிட்டார் போர்முரசு! பொதுவுடைமைக்
கொள்கைஇதா? நண்பரைப் பின்னிருந்து
வெட்டிக்குழி பறித்திடுதல் தானோ? இந்த
வீணர்களாம் சீனர்களோர் சாபக்கேடு!

மனிதர்களின் சுயஉரிமை தன்னை நாட்டின்
மாண்புடைய சுதந்திரத்தைக் காத்துசம
இனிமையுடை வாழ்வதனை அமைப்பதுவே
எழிலார்ந்த பொதுவுடைமை என்பார்; இன்று
பனிமலையை தாண்டிவரும் சீனர் செய்கை
பிறர்நாட்டை ஆக்ரமித்து கவரும்கீழ்
தனியுடைமை ஆனதையோ! தீயடியில்
தள்ளிடுவோம் பொதுவுடைமை பேசுவோரை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையின் வெற்றி !

(மலைநாட்டுச் சூழ் நிலையைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட சிறு நாடகம்)

ஆசிரியர்:- க. கந்தசாமி

தயாரிப்பு :- மாணவ முத்தமிழ் மன்றம்

புனித கபிரியேல் கல்லூரி.

எட்டியாந்தொட்டை.

இயக்குநர் :- ஏ. பி. வி. கோமஸ், பீ. ஏ (இலங்கை)

முக்கிய கவனிப்பு:

இந்நாடகத்தை யாராவது மேடை ஏற்ற விரும்பின் மேற்படி மன்றத்தின் உத்தரவு பெறல் வெண்டும்.

நாடகம் :- கண்டி மலைநாட்டுக் கலைவிழாவில் நடிக்கப்பட்டு மூன்றாம் பரிசு பெற்ற நாடகம்

## "நேர்மையின் வெற்றி!"

பரிசு பெற்ற மற்ற நாடகங்கள் இன்னும் வந்து சேராததால் முதலாவதாக எமக்குக் கிட்டிய இந்த நாடகத்தைப் பிரசுரித்துள்ளோம்.

காட்சி : 1. இடம் : மெனேஜர் பாலுவின் வீடு.

[பாலு தனது வேலையாளைக் கூப்பிடுகிறான்]

பாலு :- வீரப்பா ! பிரயாணம் போகப் போகிறேன், வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். [மெதுவாக நடக்கிறான் பாலு]

வீரப்பன்: சரியங்கய்யா ! [என்று கூறிவிட்டு மேசையில் இருந்த கடிதங்களை யெல்லாம் ஒழுங்கு படுத்துகிறான். இவ் வேளை பாலுவின் நெருங்கிய நண்பன் ஆனந்தன் வாசலருகே வருகிறான். அவனைக் கண்டதும்]

பாலு :- ஆனந்தன் :- [இருவருமே] ஓ மிஸ்டர் ஆனந்தன். ஓ ! மிஸ்டர் பாலு இருவரும் கைகுலுக்குகிறார்கள்]

பாலு :- [வந்தவரை வரவேற்ற பாலு அவரை அன்புடன் பார்த்து] ஆனந்தா உட்காரேன் ! [இருவருமே அமருகிறார்கள்]

ஆனந்தன் :- மிஸ்டர், பாலு ! உன்னிடம்தான் ஒரு முக்கிய விஷயமாய் வந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலு: உம . . . அப்படி என்னப்பா முக்கியமான விஷயம் ?

ஆனந்தன்:- எங்கள் நல்வாழ்வு வாலிபர் சங்கத்தின் சார்பில் ஒரு கலைவிழா நடத்தப்போகிறோம் ! அதற்கு . . .

பாலு:- [புன்னகையோடு] உதவி கோரி வந்திருக்கிறாயாக்கும் ! இப்படிப்பட்ட கலை விழாக்களின் மூலம் தான் நமது சமுதாயத்தையும், ஏன், நாட்டையுமே சீர்திருத்தலாம். நமது சமுதாயத்தினர்களின் நல்வாழ்வுக்கு அடிகோலும் கலைவிழாவுக்கு நான் உதவி செய்யாமல் இருக்கவே மாட்டேன் ! உங்களுடைய இந்த முயற்சி பாராட்டக் கூடியது. உங்களைப் பாராட்டுகிறேன் என்னாலான உதவிகளை எல்லாம் தாராளமாகத் தந்து தவுகிறேன்.

ஆனந்தன்:- நன்றி. [ஆனந்தமாகக் கூறுகிறான்]

பாலு:- வீரப்பா ! இரண்டு கப் 'டீ' கொண்டுவா ! [வேலையாளிடம் கூறுகிறான் !

வீரப்பன்:- சரிங்கய்யா ! [போகிறான்]

ஆனந்தன்:- [ஆச்சரியத்துடன்] பாலு ! நீ எப்படியப்பா இந்த எஸ்டேட்டுக்கு மெனேஜரான ?

பாலு:- [சோகத்துடன்] அது பெரிய கதை ! [டீயுடன் வேலையாள் வருகிறான்]

ஆனந்தன்:- பெரிய கதையா? சொல்லப்பா, சொல்லு.

பாலு:- பி ஏ. பாசானதும், வேலைக்கு 'எப்ளிகேசனும்' போட்டு விட்டு என்னை வளர்த்து ஒரு பட்டதாரியாக்கிய என் அன்பு அண்ணனைப் பார்க்க அண்ணனின் வீட்டுக்கு வந்தேன் ! அன்று . . .

[ திரை ]

காட்சி: 2. இடம்: பாலுவின் அண்ணன் வேலு வீடு

[தனிமையிலே, வேலு தன் தம்பியாகிய பாலுவின் வரவை எண்ணிக்கொண்டிருக்கிறான்]

வேலு:- என்னது இன்னும் தம்பி பாலுவைக் காணோமே ! ஏதும் . . . தவறிடுச்சோ ? ம் . . . சின்னத்தம்பி மோகனைக் கூட காணோமே. கண்டாக்கய்யாவும் என்னதோ ஒரு பெட்டி தந்தாரு. அதையும் இப்ப ரப்பர் மேக்கரய்யா கிட்ட குடுக்கணும். நேரமும் ஆவுது. வீட்டை எப்படித் தொரந்து போட்டுப் போரது ? [இவ்வேளையில் தோட்டத்திலுள்ள ஒரு பெரியவர் வருகிறார்]

பெரியவர்:- என்னப்பா வேலு, ஒரே யோசனையா இருக்கியே !

வேலு:- இல்ல ! இன்னைக்கு ஏந்தம்பி பாலு வருவான். எதிர் பார்த்துக்சிட்டிருக்கேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்:- அப்ப ! ஒரே கொண்டாட்டம் தான் இன்னைக்கு.

வேலு:- ஆமா, கொண்டாட்டம் தான் !

பெரியவர்:- அந்தப் பெட்டியில என்ன இருக்குது? [மேசையருகே இருந்த பெட்டியை நோக்கிக் கேட்கிறார்]

வேலு:- அது . . . கண்டக்கய்யா கொடுத்தாரு ! ரபர் மேக்கரய்யா கிட்ட கொடுக்கணும் . . . !

பெரியவர்:- சரி கொடுக்கலாம் ! [பெரியவர் வாசல் பக்கம் பார்க்க பாலு ஒரு 'ஹேன்ட் பேக்' குடன் வருகிறான்]

பெரியவர்:- இந்தா தான் தம்பி வந்துட்டாரே !

வேலு:- [ஆனந்தத்தோடு] வந்திட்டியா தம்பி வாப்பா வா ! பரீச்சையெல்லாம் முடிஞ்சுட்டுதா? பாஸாயிட்டியா தம்பி ?

பாலு:- ஆமாண்ணு ! உங்களின் முயற்சியால் உயர்ச்சியடைந்து விட்டேன். பரீட்சையிலே சித்தியடைந்து விட்டேன் ! பதில் தான் வரவேண்டும் அண்ணு !

வேலு:- என்னப்போல, இந்த தோட்டத்துல இருந்து ஓடா ஓழச்சி ஒடம்ப கெடுத்துகிறதவிட படிச்சு உத்தியோகம் பார்க்கிறதே மேல் !

பெரியவர்:- இப்படிப் படிச்சி எல்லாருமே முன்னேறிட்டா, நம்ம சமுதாயமே முன்னேறிடும்.

வேலு:- [தம்பியைப் பார்த்து] சரிதம்பி, எனக்கு ஒரு முக்கிய வேலையிருக்கு நீ இவரு கிட்டப் பேசிக்கிட்டு இரு ! தம்பி மோகனும் வந்துடுவான். நான் போயிட்டு வாரேன் ! [வேலு போகிறான்]

பாலு:- சரியண்ணு ! [பாலு நாற்காலியில் அமர்ந்து, பெரியவரை நோக்குகிறான்] எப்படி, நம்ம தோட்டத்தில் எல்லாரும் நல்லா இருக்கிறார்களா ?

பெரியவர்:- ஆமா! எல்லாம் சொகமா யிருக்காங்க. [இவ்வேளை வேலுவின் இளைய தம்பியும், பாலுவின் தம்பியுமாகிய மோகன் கையில் ஒரு புத்தகத்துடன் வருகிறான்].

மோகன்:- அண்ணு ! வந்திட்டீங்களா ?

பாலு:- ஆமா! வந்திட்டேன். சுகமாயிருக்காயா ?

மோகன்:- ஆமண்ணு !

பாலு:- [மோகன் கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்து] அது என்னப்பா புத்தகம்? [பாலு புத்தகத்தை வாங்கி] 'திருக்குறள்'—நல்ல புத்தகம் தான் ! சரி, நீ நல்லாப் படிக்கிறயா ?

மோகன்:- ஆமண்ணு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலு:- நம்ம அண்ணாவின் முயற்சி வீண் போகாமலிருக்க வேண்டுமானல் நீ நல்லா படிக்கவேண்டும் ?

மோகன்:- சரியண்ணு, அதுசரி, அண்ணு ஒரு பெட்டியைத் தூக்கிக்கிட்டு போனுரா ?

பாலு:- ஆமா ! ஒரு பெட்டியைத் தூக்கிக்கிட்டுத்தான் போனுர் !

மோகன்:- [பதட்டத்துடன்] அப்பசரி நீங்க இருங்க நான் வர்ரேன்.

[ஓடுகிருன் மோகன்] பாலுவின் முகத்தில் சிந்தனே ரேகை படருகிறது !

பாலு:- ஏன், இவன் பதட்டப்பட்டு ஓடுகிருனே ?

பெரியவர்:- ஆமா .. ஏதாவது நடந்திருக்குமோ என்னமோ. அப்பசரி நீ இரு தம்பி நா (ன்) போயிட்டு வாரேன். (போகிருர்) பாலு சிந்தனேயோடு இருக்கிருன்]

திரை.

இடம்: பாதை.

காட்சி 3.

[வேலு பெட்டியுடன் வீதி வழியே நடந்து செல்கிருன். அப்போது தோட்டத்துக் காவல் காரர்கள் வருகிருர்கள் வேலுவுக்கு எதிரே]

1ம் காவல்காரன் :- அடே வேலு பெட்டியைக் கீழே வையுடா ?

வேலு:- ஏ (ன்) யா கீழே வக்கினும் ? கண்டாக்கய்யா குடுத்தாரு. கீழவைக்க முடியாது !

2ம் காவல்காரன்:- கண்டக்கய்யா வாய் இருந்தாலும் எந்த ஐயா வாய் இருந்தாலும் எங்களுக்கென்னுடா !

1ம் காவல்:- அடே வேலு, நீ பொல்லாத களவாளிடா. பெட்டியக் கீழே வையுடா !

வேலு:- ஐயா இப்படிப் பேசாதிங்க. நான் கள்ளனில்லேயய்யா! வேணும்னு இந்தப் பெட்டியைப் பாருங்க. இந்தாய்யா! [வேலு தலேயில் வைத்திருந்த பெட்டியைக் கீழே போடுகிருன்[

1ம் காவல்:- அதைப் பாருடாப்பா! [2ம் காவல்காரன் பெட்டியை உடைக்கிருன்]

2ம் காவல்:- ஒட்டுப் பாலுடா !

1ம் காவல்;- அடே, இந்த மாதிரிச் செஞ்சுதானுடா ஒ(ன்)ந்தம்பியப் படிக்க வச்சியாடா . . . ?

2ம் காவல்;- இப்படிப் படிச்சா அவன் எப்படிடா உருப்படுவான்!

வேலு;- இருவது வருஷமா இந்தத் தோட்டத்துல வேல செய்யுற நான் ஒரு துரும்பக் கூட களவெடுத்து கிடையாது. இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் காவல்: அது தொரக்கிட்டே பேசுடா! வாடா! வா!! [வேலுவை இழுக்கிறார்கள்] [இவ்வேளை வேலுவின் இளைய தம்பியாகிய மோகன் ஓடிவிடுகிறான்.

மோகன்:- அ . . . ண் . . . ணா! [2ம் காவலாளி மோகனைத் தள்ளி விட்டு பெட்டியையும் தூக்கிக்கொண்டு போகிறான்]

வேலு?- தம்பி நான் கஷ்டத்துல மாட்டிக்கிட்டேன். நல்லவர்களுக்கு துன்பம் கூட என்பது என் வாழ்வில் நடந்துடுச்சி! ஒரு பாவமும் அறியாத என்னை . . . கள்வனைக் கிட்டாங்க, எப்பவும் 'நேர்மை வெல்லும்!' அதற்கு அழிவேயில்லை. நீ வருந்தாதே வீட்டுக்குப்போ தம்பி!'

1ம் காவல்:- அடே வேலு வாடா வா! [இழுத்துக்கொண்டு போகிறார்கள்]

மோகன்:- நான் நெனச்சது நடந்துடுச்சு. இதற்குப் பாலு அண்ணைவிடம் சொல்லித் தகுந்த பரிகாரம் தேடவேண்டும்! [பாலுவிடம் ஓடுகிறான்]

[திரை]

காட்சி: 4. இடம்:- வழி.

[கண்டக்டர் அன்டனி, இராமலிங்கமாகிய ஒரு தொழிலாளியைப் பயமுறுத்துகிறான்]

கண்டக்டர்:- [கைப்பிரம்பை தரையில் 'பளர்' என்று தட்டிய வண்ணம்] டேய்! உண்மையைச் சொல்லிப்புடு!

இராமலிங்கம்:- எனக்குத் தெரியாதுங்க! ஏதோ . . .

கண்டக்:- என்னடா, ஏதோ ஏதோன்னுஇருபது தரம் செல்லிட்டியே! நான் யாரு தெரியுமா? இந்தத் தோட்டத்துல இருவத்தி அஞ்சி வருஷமா கடமையாற்றுர கண்டக்டர் மிஸ்டர் அண்டனி. என்னை எதிர்த்த அந்த மாரிமுத்துப்பயல தோட்டத்த உட்டே வெரட்டிபுட்டேன். இப்ப அந்த வேலுப்பயலையும் அவன் குடும்பத்தையும் தெருத் தெருவா அலைய வைக்கப்போரேன்! அதுபோல . . . உன்னையும் : . .

இராம: வேண்டாமுங்க அய்யா!

கண்டக்:- உம் . . . ஹூம் கவனமா நடந்துக்க! போடா!

இராம;- சலாங்கஜய்யா!

[தலையை அசைத்த வண்ணம் தனியே கண்டக்டர் பேசுகிறார்]

கண்டக்:- இவங்கள இப்படிக் செய்யாட்டி வேலை செய்யுறதே கஷ்டம், இப்படி உறுட்டிக்கிருட்டி வைக்காத தால தானே வேலுப்பய என்னை மிஞ்சப்பாக்கிறான். அவனை ஒழிக்கத் திட்டம் போட்டேன். வெற்றியும் கண்டுட்டேன். ஆனாலும், பெரிய துரை கொஞ்சம் தொழிலாளிசளுக்கு 'சப்போட்' அன்பு, அறம், ஈகை யின்னுக்கிட்டு . . . சாச்சா! சின்ன துரை நம்ப கைக்குள்ள தானே! [திரும்புகிறார் சின்ன துரை வருகிறார்]

(58ம் பககம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் கதை.

## 1. தந்தி தந்த தகவல்.

பரப்போடு தந்தியை எடுத்தான் பரமதேவன். அவனது கால்பெருவிரல் தொட்டு உச்சந்தலைவரை நடுக்கம் எடுப்பது போன்ற உணர்ச்சி ஒன்று ஓடியது. அவனருகில் நின்ற அவனது அன்னையும் திகிலடைந்து பேசமுடியாமல் திக்கடித்தாள்.

பரமதேவன் தந்தியைப் பிரித்துப் படிக்க முயன்றான். அந்த நேரத்தில் 'இதில் கையெழுத்தைப் போடுங்கள்' என்று சொல்லிக் கொண்டே குறுக்கிட்டான் தந்திக்காரன். தாளொன்றை நீட்டிப் பரமதேவனின் கையெழுத்தையும் பெற்றுக்கொண்டு சென்று விட்டான் அவன்.

கையெழுத்தைப் போட்ட பரமதேவன் தந்தியை வாசிக்கத் தொடங்கியபோது இராசம்மாளின் உடலோ அசையத் தொடங்

**"இடிந்த மாளிகை"**
**மலைநாட்டு எழுத்தாளர்**
**நவாலியூர் நா. செல்லத்துரை பி.ஏ.**

கியது, 'பரமு' என்னப்பா எழுதியிருக்கு. சீக்கிரம் பார்த்துச் சொல்லு மகனே,'' என்று தழுதழுத்த குரலில் பேசினாள் அவள்.

அப்படிக் கேட்டவளின் மனதிலே ஆறுதல் தோன்றவில்லை. அவளின் நிலையிலே எதையோ அறியவேண்டும் என்ற பரப்பரப்புத் தான் தோன்றியது. அவள் கொஞ்சமாவது ஆங்கிலம் அறிந்திருந்தால் தந்தியைத் தானாகவே பிரித்து வாசித்திருப்பாள். ஆனால் தாய்மொழியாம் தமிழையே ஏழாம் வகுப்புக்குமேல் படிக்காமல் நிறுத்திய அவள், ஆங்கிலத்தை எப்படிப் படித்திருக்க முடியும்?

தந்தியை வாசித்து முடித்ததும் பெரியதோர் பெருமூச்சை வெளியேகற்றினான் பரமதேவன். அந்தப் பெருமூச்சில் தான் எத்தனை பொருள்? ''அம்மா,'' என்றான் சிரிப்போடு. இராசம்மாளும் அவனைப் பார்த்தபடியே ''பரமு'' என்றாள்.

''அம்மா, எனக்கு வேலை ஒன்று கிடைத்துவிட்டது. நாவலப்பிட்டியிலுள்ள கல்லூரியொன்றில் ஆசிரியராய்க் கடமையாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்படி அக்கல்லூரி அதிபர் இத்தந்தியை எனக்கு அனுப்பியிருக்கிறார். நாளைவிட்டு அடுத்த நாள் நான் புறப்படவேண்டும்,'' என்று பொங்கிவரும் பெருமகிழ்ச்சியுடன் அடுக்கி அடுக்கிப் பேசினான் பரமதேவன்.

இராசம்மாவுக்கோ சொல்லமுடியாத மகிழ்ச்சி மடை உடைத்துப் பாய்ந்தது. ''நாலு ஆண்டுகளாக ஆறாயிரம் ரூபா பணத்தைச் செலவிட்டுப் பையனைப் படிக்கவைத்த பயனை இனிமேல்தான் அடையப்போகிறோம். பரமு உழைக்கத் தொடங்கியதும் எங்கள் குடும்பக் கவலைகள் கலைந்துவிடும்; குடும்பமே செழித்து நல்ல நிலைக்கு வரும்'' என்றெல்லாம் தனது மனதுக்குள் சொல்லிக்கொண்டே பரமதேவனின் நெற்றியிலும் உச்சியிலும், கன்னங்களிலும் அன்னை முத்தம் கொடுத்த அவள் வீட்டுக்குள் சென்று ஆகவண்டிய வேலைகளைக் கவனித்தாள்.

பரமதேவன் தன் சிந்தனைக்கு அலைகடல் வெட்டினான். அந்தக் கடல் வழியாய் ஓடிய நீரில் 'தொல்லையும் அல்லலும்' என்னும் கற்பாறைகளையெல்லாம் எதிர்த்துப் பாயும் அலைகள் அடித்துக்கொண்டேயிருந்தன.

போக வேண்டிய நாளும் நெருங்கியது. தன் உற்றார் உறவினரிடம் சென்று தனது பயணம் பற்றிக் கூறினான் பரமதேவன். அதன் பின்பு தனது பெற்றோரிடமும் உடன் பிறந்தவர்களிடமும் ஆசிபெற்று யாழ்நகர்ப் புகையிரத நிலையத்திற்கு வந்து சேர்ந்தான். நேரமும் மாலை 6-30 ஆகிவிட்டது. புகையிரதம் வருவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள்தான் உண்டு என்பதையும் அறிந்துகொண்டான் பரமதேவன். நேரமும் ஓடியது. ''புகையிரதம் இன்னும் வரவில்லையே . . . . . . என்ன காரணமாயிருக்கலாம்,'' என்று பரபரப்பாய் பேசிக்கொண்டிருந்தார்கள் பலர். அப்போதுதான் புகையிரதமும் நிலையத்தை அண்டியது,

புகையிரதம் வருவதைக் கண்ட மக்கள் எல்லோரும் தத்தம் பெட்டி படுக்கை யாவற்றையும் எடுத்து ஆயத்தமாகவே வைத்திருந்தனர். புகையிரதம் நிலையத்தில் நின்றதுதான் தாமதம் ஒருவரையொருவர் இடித்தபடியே எல்லோரும் ஏறிவிட்டார்கள். பரமதேவனும் எப்படியோ ஏறிவிட்டான். மேலேயுள்ள பெட்டி தாங்கியில் தனது பெட்டிகளை வைத்துவிட்டு, தலையணையை மட்டும் தன் மடிமேல் வைத்துக்கொண்டான். புகையிரதமும் தனது ஓட்டத்தை ஆரம்பித்தது.

சிறிது நேரத்தால் பரதேவனைச் சிந்தனை சிறைப்பிடித்துவிட்டது. தான் பிறந்த பொன் நகரையும், தன்னைப் பெற்று வளர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தையரையும் தன் அன்புக்குப் பாத்திரமான உடன் பிறந்தோரையும் விட்டுச் செல்வதை எண்ணிக் களிப்பிழந்தவனாக வே காணப்பட்டான்.

என்ன செய்வது? தொழிலும் உழைப்பும் அவனைத் தூரத்து ஊருக்கு இழுத்துச் செல்கிறது. ஒருவன் தனது ஊரிலோ, நகரிலோ இல்லையென்றால் தனது மாகாணத்திலோ உழைத்துப் பிழைக்க முடியாதவனாயிருக்கிறானென்றால் அதற்கு யார் குற்றவாளிகள்? யாரை நோவது? நொந்துதான் என்ன பயன்? ஆகப்போவதுதான் என்ன?

நேரமும் ஒன்பது ஆகியது. இரவுச் சாப்பாட்டை உண்பதற்காகக் கட்டுச் சாதத்தை எடுத்தான் பரமதேவன். யாழ்நகர்ப் புகையிரத நிலையத்தில் அவனுக்கு அறிமுகமான மற்ற இருவரும் தாம் கொண்டுவந்த சாப்பாட்டை உண்டு முடித்தார்கள். அதன் பின்பு மூவரும் எதை எதையோ பேசித் தம்மைத்தாமே நன்கு அறிமுகப்படுத்திக்கொண்டனர். நேரமும் பத்தாகியது. பேச்சும் சிறிது சிறிதாய்க் குறைந்தது. உறக்கம் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்தன் வசப்படுத்தியது. ஆனால் புகையிரதமோ புயல் வேகத்திலும் ஆமைவேகத்திலும் ஓடி அடுத்த நாட்காலை நாவலப்பிட்டியாவை அடைந்தது'

வண்டியை விட்டிறங்கினான் பரமதேவன். முதன் முதலாக நாவலப்பிட்டியா வந்திருக்கும் அவனுக்குத் திக்குத்திசை யொன்றும் தெரியவில்லை. தான் கடமையாற்றவேண்டிய கல்லூரியை எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதே அவனின் முதல் நோக்கம். கல்லூரியைக் கண்டு பிடித்து அதிபருக்குத் தன்னை அறிமுகம் செய்யவேண்டுமென்று எண்ணியே புகையிரத நிலையத்தை விட்டு நடையைக் கட்டினான் விரைவாக. அவனின் வெற்றி முயற்சியைத் தடுக்கும் நோக்கமோ என்னமோ தெரியவில்லை, மழையும் கொட்டி முழக்கிக்கொண்டேயிருந்தது.

## 2. சுப்பர் அக்டிங் [திறமான நடிப்பு]

நாவலப்பிட்டியா நகரையடைந்த பரமதேவன் தான் கடமையாற்றவேண்டிய கல்லூரியைக் கண்டுபிடிப்பதற்காக எங்கெங்கோ அலைந்தான். இறுதியில் எப்படியோ கண்டுபிடித்துவிட்டான். அதிபரும் அறிமுகமானார் 1956-ம் ஆண்டு வைகாசி மாதம் பிற்பகுதியில் கல்லூரி மாணவர்களுக்கு ஆசிரியர் பரமதேவனை அறிமுகம் செய்து வைத்தார் கல்லூரி அதிபர். எஸ் எஸ். சி. மாணவர்களுக்கு வரலாறு, குடியியல், ஆங்கிலம், தமிழ் இலக்கியம் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் பெரும் பொறுப்பு இந்தப் பரம தேவனிடமே ஒப்படைக்கப்பட்டது.

பரமதேவன் ஆசிரியரானான். தனது கடமையில் கண்ணுங் கருத்துமாயிருந்து திறம்படச் செய்ததன் காரணமாகவோ என்னமோ தெரியவில்லை, மாணவர்கள் பரமதேவன்மேல் அளவில்லா அன்பும் மதிப்பும் வைத்திருந்தார்கள்.

இவ்வாறு நாட்கள் பல கடந்தன. மாதமும் ஒன்றாகி மறைந்தது. பரமதேவன் படிப்பித்த கல்லூரித் தமிழ் மறைக் கழகத்தின் சார்பில் 'எதிர்வரும் ஆடிமாதம் இருபதாம் தேதி ஆண்டு விழா நடைபெறும்' என்று அறிவித்தார் கல்லூரி அதிபர். அந்த ஆண்டு விழாவின் சிறப்புக்கு அணிசெய்ய நாடகம் ஒன்று நடித்தாக வேண்டும்; அதுவும் உயரிய நாடகமாகவே அமைய வேண்டும் என்று தான் கழகத்தின் ஆண்டு விழாச் செயற் குழுவினர் முடிவு கட்டினர்.

பூனைக்கு மணியொன்று கட்டவேண்டும் நாம் களிப்பாக வாழ வேண்டுமானால்'' என்றுதான் எலிகள் கூறும். ஆனால் கட்டவேண்டுமே? யாரால் முடியும் இந்தச் செயல் என்பதுதான் அவர்களை எதிர்நோக்கியுள்ள சிக்கல். சிறந்த நாடகம் நடிக்கப்படல் வேண்டும் என்பதுதான் பேச்சு . . . . ஆனால் யார் நடிப்பார்கள் என்பது தான் தீராத சிக்கலாயிருந்தது அக்கல்லூரியைப் பொறுத்தமட்டில்.

இத்தகைய முடிச்சை அவிழ்க்க முன்வந்தான் பரமதேவன். நாடகமென்றால் போதும்; உணவு கூட வேண்டாம் என்றுதான் சொல்லிவிடுவான். நாடகத்தில் அவனுக்கிருந்த அளவற்ற ஆசை தான் கொஞ்சமா? எண்ணிலடங்கா அலாதிதான் அனுவளவா? சொற்களாலே அதைத் தீட்டி எவருக்கும் விளங்கவைப்பதென்றால் உண்மையில் அது முயற்கொம்பாகத்தானிருக்கும்.

பரமதேவன் தன் கதைக்கான நடிகர்களைத் தேர்ந்தெடுத்தான். நாடகப் பயிற்சி நாள் தவறாமல் நடைபெற்றது. அதிபரும் அடிக்கடி நாடகத்தைப்பற்றி விசாரிப்பது வழக்கம். அன்றொருநாள் ,பரமதேவன்' என்றழைத்த அதிபர் 'நாடகம் எப்படி இருக்கிறது. திறமாக நடக்குமா? என்றார். ''என் திறமையை இந்த நாடகத்திலும் காட்டியிருக்கிறேன். நம் தமிழ் விழாவின் சிறப்புக்காக நடிகர்களின் உயிரையே வாங்கிவிடுவேன் போலிருக்கிறது, எல்லாம் வெற்றியாய் முடியும், கவலைப்படாதீர்கள் ஐயா,'' என்று மலரும் புன்னகையோடு பதில் கொடுத்தான் பரமதேவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லாம் வெற்றியாக முடியவேண்டும் என்பதற்காகவே நான் முயற்சி எடுக்கிறேன். தென்னிந்தியப் பெரியார்களுள் ஒருவரான திருவாளர் மா. அரசங்கண்ணனுர் அவர்களும் வருகிறுர்கள். இம்முறைத் தமிழ் விழா தரம் உயர்ந்ததாயிருக்க வேண்டும் என்பதே எனது தணியாத ஆசை. இதற்காகவே நாடகத்தின் உயர்வைப்பற்றி உம்மிடம் அடிக்கடி சொல்லிவருகிறேன். நாடகம் திறமாக அமைந்தால்தான் விழாவின் தரமும் உச்சநிலையை அடையும்,'' என்றெல்லாம் கூறிவிட்டுச் சென்றுர் கல்லூரி அதிபர்.

இவ்வாறு நாட்களும் செல்லச் செல்ல நடகமும் திறமாகவே உருவெடுத்தது. பரமதேவன் தன் திறமை முழுவதையும் இந் நாடகத்திற்கே செலவிட்டான். நடிகர்கள் எல்லோரும் தத்தமக்குக் கொடுக்கப்பட்ட பாகங்களை மிகத் திறமாகவே செய்தனர். பரமதேவனுக்கோ அளவில்லாத களிப்பு.

விழா நாளும் வந்துவிட்டது. அன்றொரு சனிக்கிழமை மாலை நேரம் 5-30 ஆகிவிட்டது. தென்னிந்தியப் பெரியார் திருவாளர் மா. அரசங்கண்ணனுர் அவர்களும் வந்துவிட்டார்கள். விழா விமரிசையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஈழத்துத் தமிழ் மக்கள் தலைவர்களுள் ஒருவரின் தலைமையில் தான் விழாக் கூடியது. விழாத் தலைவர் தமது முதலுரையில் தமிழ் விழாவின் சிறப்பையும் அதனுல் பாமரமக்கள் அடையும் பயனையும் விரித்துரைத்ததோடு தென்னிந்தியப் பெரியார் மா. அரசங்கண்ணனுர் அவர்களையும் மக்கள் மன்றத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

தென்னிந்தியப் பெரியாரும் தமது சொற்பொழிவைத் தேன் சொட்டும் தமிழில் தொடங்கினுர். 'கல்விககூடமும் கலைகளும் என்ற தலைப்புப் பொருளில் பேசத்தொடங்கிய அவர் ஒரு மணி நேரம்வரை மிக மிக அழகாக சுவைக்குன்றுத முறையில், மக்கள் கூட்டம் கூர்ந்து கேட்கும் விதமாகவே பேசினுர்.

அறிஞர் அவர்கள் பேசி முடிந்தபின் தலைவர் தமது முடிவுரையை நிகழ்த்தினுர். அதன் பின்பு கழகச் செயலாளன் தனது நன்றியுரையில் அறிஞர் அவர்களையும் தலைவர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்ததோடு சிரமம் பாராது மன்றத்தை அழகுறச் செய்த மக்கள் கூட்டத்திற்கும் நன்றி தெரிவித்தார்,

கூட்டம் முடிந்து பதினைந்து நிமிடங்களால் 'காட்டிக் கொடுத்தவன்,' என்ற நாடகம் ஆரம்பமானது. எழில் ததும்பும் முறையிலே அமைந்திருந்தது முதலாவது காட்சி. கதாநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் ஏற்று நடித்த பரமதேவன் கம்பீர உடையுடனும் ஒரு நடையுடனும் காட்சி தந்தான். எடுப்பாக நடந்து, சிம்மக்குரலிலே செருக்குடன் பேசிக் கனகச் சிதமாகவே முதலாவது காட்சியை நடித்து முடித்தான். சிறிது சிறிதாக வெளித்திரை மூடப்பட்டது. மன்றத்திலிருந்த மக்கள் அவனைப் பாராட்டும் முகமாகக் கைதட்டிப் பேரொலியும் வாழ்த்தொலியும் வழங்கினுர்கள்.

இரண்டாவது காட்சியில் பரமதேவனில்லை. தண்ணீர் கொஞ்சம் குடிப்பதற்காக வெளியில் வந்தான். அதே நேரத்தில் தான் மன்றத்திலிருந்தும் இரண்டு இளம் வயது மங்கையர்கள் வெளி வந்தனர். தற்செயலாகப் பரமதேவனையும் அவர்கள் பார்க்க நேர்ந்து விட்டது', கொங்கிரூட்ஸ் (நல்வாழ்த்துகள்) யையின் அக்டிங் (Fine acting) அழகான நடிப்பு) 'சுப்பேர்ப்' (Superb-திறம்) என்றெல்லாம் அவனைப் புகழ்ந்து பெருமை கொடுத்து விட்டு மறுபடியும் மன்றத்துக்குள் சென்றுர்கள்.

'தாங்ஸ்' (Thanks-நன்றி). இதுதான் பரமதேவன் அவர்களுக்குக் கொடுத்த பதில். 'யார் தன்னை வாழ்த்தினுர்கள் தன் நடிப்பைப் புகழ்ந்து சொல்லும் பாவையர்கள் யார் ? எங்கு வாழுகின்றுர்கள் அவர்கள்?' என்பதை யெல்லாம் அறியவேண்டுமென்று அவன் நினைக்கவுமில்லை ; அதைப்பற்றி அக்கறையெடுக்கவுமில்லை. தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு மேடைக்குச் சென்றுன் பரமதேவன். திரை மறுபடியும் திறக்கப்பட்டது. காட்சி மூன்று, காட்சி நாலு என்று வெற்றிகரமாகவே நாடகம் நடைபெற்றது. இறுதிக்காட்சி எல்லோர் கண்களையும் அழச் செய்தது என்றுல் கூட மிகையாகாது. பரமதேவன் சிறைப்படுத்தப்பட்டு இறக்கும் நேரத்தில் நாட்டு மக்களுக்கு அவன் சொன்ன இறுதிச் சொற்பொழிவும் அதற்கேற்ற நடிப்பும் எல்லோர் மனதையும் ஈர்க்கத்தான் செய்தன. கண்ணீர் விட்ட மக்கள் நாடகத்தின் உயர்வை மெச்சினுர்கள்.

கூட்டம் கலைந்தது. அன்றைய தமிழ் விழாவும் முடிவு பெற்றது. கல்லூரி அதிபர் பரமதேவனைப் புகழ்ந்தார். 'பரமதேவனுக்குக் கைமாருக எதைச் செய்ய வேண்டும் ; அவனின் கடமை உணர்ச்சிக்கு நன்றியாக என்ன கொடுக்கலாம்,'' என்றெல்லாம் அவர் எண்ணுமலில்லை. விழாத் தலைவரும் அறிஞர் அரசநாயகம் அவர்களும் தொண்டமான் அவர்களும் பரமதேவனை மெய் மறந்து மெச்சினுர்கள்.

பரமதேவனே தன்னைப் பெரிதாக எண்ணவில்லை. இறைவன் தனக்குக் கொடுத்த பெரும் வரம் இதுதான் என்று எண்ணியே களிப்படைந்தான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கத்தான் செய்கிறது. அதை விருத்தி செய்யவேண்டியது அவரவர் கடமையாகும். சிலர் தமக்குக் கொடுக்கப்பட்ட அவ் வரத்தை (திறமை) பயன்படுத்தாமல் பாழாக்கி விடுகிறார்கள். சிலரோ அதைப் பயன்படுத்தி, தம்மையும் இறைவனையும் மேன் மைப் படுத்துகிறார்கள். பரமதேவன் தனக்குக் கொடுக்கப்பட்ட அவ்வரத்தை இடையறாத தனது பியற்சி கொண்டு வளர்த்தபடி யினாற்தான் இன்று பலரால் புகழப்பட்டான்.

பலரும் அவனைப் புகழும் போது அவனைப் பெற்றெடுத்த அன்னை இராசம்மா மட்டும் அவனருகே இருந்திருந்தால் அவனைப் பெற்ற போது ஆண்மகன் என்று அறிந்ததும் எவ்வளவு பூரிப்படைந்தா ளோ அதைவிட மேலான பேருவகை பெற்றிருப்பாள். கற்றவர் களும் மற்றவர்களும் பரமதேவனைப் பார்த்து, "சான்றோன்; திறமைவாய்ந்தவன்; கெட்டிக்காரன்," என்றெல்லாம் புகழும் போது தமக்கு எவ்வளவு இன்பமாக இருக்கும்?

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்," என்று கூறியிருக்கிறார் வள் ளுவர். இந்தக் குறளின் கருத்துக்கு எடுத்துக்காட்டாகவே பரம தேவனின் தாயார் இராசம்மாளும் அன்று காட்சியளித்திருப்பாள்.

தாய்தான் அருகில் இல்லாத போதும் அவனது தந்தையாவது இருந்திருந்தால் . . . . . அப்பப்பா . . . . . . . எவ்வளவு களிப்புக் கொண்டிருப்பார்? "மகன் எனக்காற்ற வேண்டிய கடமை இது தான். அவன் அதைச் செய்துவிட்டான். 'பரமதேவனின் தந்தை பரமதேவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ' என்று மக்களும் வாயார வாழ்த்துவார்கள். நான் அவனைப் படிப்பித்த பயனை இன்றல்லவா அடைந்திருக்கிறேன்," என்று எண்ணிக் களிப் படைவார்.

"மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்," என்றுதான் வடித்திருக்கிறான் வள்ளுவன். எனவே, பரமதேவனின் தந்தை நாகலிங்கம் அப்படி நினைப்பதில் எதுவித தவறுமில்லை. ஆனால் பரமதேவனின் அன்றைய வெற்றியையும் திறமையையும் பார்க்கக் கொடுத்து வைக்காதவர்களாகி விட்டனர் நாகலிங்கமும் இரா சம்மாளும்.

தனது தாய்தந்தையர் அன்று இல்லையே தனது வெற்றியைக் கண்டு மகிழ என்று பரமதேவன் துக்கப்படவில்லை. அவர்களுக்குள்ள வசதிக் குறைவு அவனுக்கும் தெரிந்ததுதான். யாழ்நகரில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்திற்காக நாவலப்பிட்டியாவுக்கு அவர்களை வரவழைப்பது அவ்வளவு சாமர்த்தியமாக அவனுக்குத் தோன்றவில்லை. அத்தோடு அவர்கள் நாவலப்பிட்டியா வருவதானால் அவர்களின் போக்கு வரத்துக்கும் மற்றச் செலவுகளுக்கும் ரூபா நூறு கட்டாயம் தேவை என்பதும் பரமதேவனுக்குத் தெரியாததல்ல. எனவே தான் அவர்கள் வரவில்லை என்று கவலைப்படாமல் இருந்தான் . . .

இவ்வாறு காலம் போக்கிய பரமதேவன் தான் தங்கும் விடுதியில் எதுவித அல்லலும் தொல்லையுமின்றி நாட்களைக் கழித்து வந்தான். இவன் தங்கியிருந்த வீட்டாரும் இவனை அன்பாகவே கவனித்து வந்தார்கள்.

மாலைவேளைகளில் மலைநாட்டின் அழகையும் பெருமையையும் சுவைப்பதற்காக மலைச் சாரலுக்கும் தேயிலைத் தோட்டத்திற்கும் செல்வது இவனின் வழக்கம். மலைநாடும் அதன் எழிலும் அவனைக் கவரத்தான் செய்தன.

''நிமிர்ந்த வண்ணம் படுத்துறங்கும் பருவமங்கையர் போல் காட்சிதரும் பனிபடர்ந்த மலைகள் ; அம்மலைகளினின்றும் ஆடிவரும் குளிர் அருவிகள் ; அம்மலைகளைச் சுற்றி வளர்ந்து வரும் பீலிச் சோலைகள், அடுக்கமைந்த தேயிலை ஆலைகள் ; காசுதரும் கழனிகள் ஆக்கம் தரும் ஆற்றுச் செல்வங்கள் அத்தனையும் நிறைந்த நாடே இம்மலைநாடு. இத்துணை சிறப்பும், பெயரும், புகழும் வாய்ந்த மலைநாடுதான் இலங்கைப் பொருளாதாரத்தின் சிகரமெனத் திகழும் திருவீடு. வந்தோரையும் வருவோரையும் வாழவைக்கும் வளநாடு. இங்கே—இந்த மலைகளிலே வளரும் தேயிலையும் ரப்பரும் இல்லையென்றால் எமக்கேது பணம்? இலங்கைக்கேது செல்வம்? நம் ஈழ நாட்டுப் பொருளாதாரத்தின் உயிர் நாடிகள் உண்மையில் மலைநாட்டு மக்கள்தான். அவர்களின் அன்றாட உழைப்புத்தான் எம்போன்றோரை வாழ வைக்கின்றது. அவர்களின் வியர்வைத் துளிகள் தான் எம்மவர்க்கு வாழ்வளிக்கின்றது. அவர்களின் இடையறு முயற்சிதான் எம்மை முன்னேற்றுகின்றது. அப்படிப் பட்டவர்களையா 'தோட்டக்காட்டார், வடக்கத்தையார்' என்கிறோம் நச்சு வெய்யிலும் கொட்டு மழையும் கவனியாது, அட்டையும் அவதியும் பாராது நாட்டின் நலனுக்காக உழைக்கும் அவர்களுக்கா குடியுரிமையும அரசுரிமையும் இல்லையென்று சொல்லுகிறோம்? கடுமையாக வேலைசெய்து காற்றிலே மூச்சைச் சிந்தி, தோட்டங்களிலே வியர்வை சிந்தி, உழைத்த சிறுதொகையை இந் நாட்டில் சிந்தி வாழும் இவர்களையா கள்ளத்தோணி எனகிறோம்'' என்றெல்லாம் எண்ணித் துக்கப்பட்டான் பரமதேவன்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா நீ பாராய் ?

— உதய பாரதி —

காலையில் எழுந்திடுவார் பாப்பா—பிறருடன்.
கதைக்கவும் நேரமின்றிப் பாப்பா
மாலைவரை வேலைசெய்வார் பாப்பா—நாமவர்க்கு
மதிப்புக்கொடுக்க வேண்டும் பாப்பா ! . . . (காலை)

பாட்டாளி என்றவரைச் சொல்வோம்—அவர்
படும் பாட்டை நாமறியோம் பாப்பா !
தோட்டங்கள் செழிப்பதுவும் அவரால்—அந்தத்
துரைமகனுர் பிழைப்பதுவும் அவரால் பாப்பா . . .
(காலை)

உழைப்பின் பலனவர்க்கு இல்லை—எனினும்
உண்மை உழைப்பாளி அவர் பாப்பா !
பிழைப்பின் வழியறிய மாட்டார்—அன்றிப்
பெரும் புகழும் எதிர்பாரார், பாப்பா . . . (காலை)

பெண்டிர் பிள்ளைகளின் நிலையிதுவே அன்றிப்
பிறிதொன்றுமில்லையடி பாப்பா !
உண்டிக்கும் நேரமின்றிப் பாப்பா—அவர்
உழைக்கும் நிலை பாராய் பாப்பா . . . (காலை)

நிமிர்ந்த முதுகு வளையப் பாப்பா—கொழுந்து
நிறை கூடை தூக்குவதைப் பாராய்
காலையில் கண்ட அவர் குழந்தை—அலறிக்
கத்துவதைக் காணுர்கள் பாப்பா . . . (காலை)

பகலுணவு இவர்க்கில்லை பாப்பா—தினம்
பாடு பட்டும் ஓய் (வு) இல்லை பாப்பா !
பகலவன் எரிக்கும் வெய்யில்தனிலும்
பாடுபடும் நிலை பாராய் பாப்பா ! . . . (காலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " கான்பரன்ஸ் "

— "சிவேரா" —

மலையக மக்கள் மத்தியில் பெருவாரியான தொழில் பிரச்சனைகள் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமாகவே இருக்கின்றன. வளர்ந்து வரும் இப்பிரச்சனைகளினால் வாழ் விழந்து வாழும் மலையகத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் உயர்ந்து வருகின்றனர். இப்படி நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தொழில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு—தொழிளாலர்கள் மத்தியில் இயங்கிவரும் தொழில் சங்கங்கள் பல வகைகளில் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அந்தப் பலவகைகளில் 'கான்பிரஸ்'ம் ஓர் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. தொழிலாளர்கட்கும் தோட்ட நிர்வாகங்களுக்குமிடையில் ஏற்படும் தகாறுகளைத் சௌசன்ய முறையுடன் சமரசமாகத் தீர்த்து வைக்கத் தொழிலிலாகா அதிகாரிகளினால் (Labour officer or the Assistant Commissioner of Labour or the Commissioner of Labour); கூட்டப்படும் இக்கூட்டத்திற்குப் பெயர் தான் கான்பரன்ஸ்.

**ஜில்லாப் பிரதிநிதிகள்:** தொழிலாளர்கட்கும் தோட்ட நிர்வாகங்களுக்குமிடையில் ஏற்படும் தகராற்றை தீர்ப்பதில் தொழிலிலாகாவை விடசம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடை தொழிற் சங்கம் அதிக அக்கரையெடுக்கும். இதை அவ்வப்பகுதியிலுள்ள மாவட்டக் கிளைகளின் பிரதிநிதிகள் கவனிப்பார்கள். மாவட்டப் பிரதிநிதிகளைப் பொதுவாகத் தொழிலாளர்கள் அழைப்பது ஜில்லாப் பிரதிநிதி என்றே. இந்த ஜில்லாப் பிரதிநிதிமார்கள், பிரச்சனைகள் நடந்த உடனேயே நிர்வாகத்திற்கும் தொழிலிலாகாவிற்கும் அறிவித்து முடிவு செய்ய ஏற்பாடு செய்வார்கள்: அதில் முடிவு ஏற்படாவிட்டால் தொழிற் கமிஷனருக்கு எழுதி உடனடியாக கான்பிரன்ஸ் கூட்ட ஏற்பாடு செய்வார்கள். இந்த முறையின்படி இன்றுள்ள தொழிற் சங்கப் பிரதிநிதி ஒருவர் என்ன வகையில் பிரச்சனைகளை ஒழுங்கு பண்ணுகிறார் என்பதை ஆராய்வோம்.

கான்பிரன்ஸ் நடக்கும் திகதி தெரிந்தவுடன் ஜில்லாப் பிரதிநிதி: சம்பந்தப்பட்ட தோட்டத் தலைவருக்குக் கீழ்கண்ட கடிதத்தை எழுதுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுரங்கம் தலைவர்,
அன்னுசி மலைத்தோட்டம். அக்கரபத்தனை போஸ்ட்.
18-10-60.
.......................................
.......................................
.......................................

அன்புடையீர்,

**கான்பரன்ஸ்.**

உங்கள் தோட்டத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைகளையும், சிக்கல்களையும், பிரச்சனைகளையும் பேசி ஓர் முடிவு செய்ய அட்டன் தொழில் ஆபிசர் எதிர்வரும் 23-10-60ல் காலை 10 மணிக்கு ஓர் கான்பிரன்ஸ் கூட்டுக்கிறார். இந்த கான்பிரன்சுக்கு நமது மாபெரும் தலைவர்களும் வருகிறார்கள், எனவே நீங்கள் தாமதிக்காது பிரச்சனைகள் விபரத்தோடும் தோட்டக் கமிட்டி அங்கத்தினர்களோடும் கொழுந்து விசயமாகப் பேச மாதர் சங்க தலைவியோடும் நமது ஜில்லாக் காரியாலயத்திற்கு எதிர்வரும் 20—10—60 மாலை 3 மணிக்கு வந்து சேரவும்.

இங்ஙனம்,

எமன்விழுங்கி,
ஜில்லாப் பிரதிநிதி

இந்தக் கடிதம் 18ம் திகதி எழுதப்பட்டதென்றாலும் ஜில்லாவின் நிதி நெருக்கடி காரணமாக 20ம் திகதிதான் அனுப்பப்படும். 18ம் திகதிக் கடிதம் 22-ம் திகதிதான் தோட்டத் தலைவருக்குக் கிடைக்கும் அப்பாவித் தலைவர் திகதியைக் கவனிக்க மாட்டார் எப்படியோ ஜில்லாவிலிருந்து அவர் பெயருக்கு ஒரு கடிதம் வந்துவிட்டது அது போதும்! ஜிம்கானா ரேஸ் விழுந்தது போன்ற மகிழ்ச்சி. இருபதாம் திகதி வரச் சொல்லி எழுதிய கடிதப்படி தனது டயரியில் குறித்துக்கொள்வார் பிரதிநிதி. இருபதாம் திகதி தொழிலாளர்கள் வருவார்களென சற்று உற்சாகமாக இருப்பார் . . . . அவருக்கு எங்கே தெரியப்போகிறது அவருடைய அசிஸடன்ட் (உதவியாளர்கள்) மார்கள் இருபதாம் திகதிதான் தபாலில் அக்கடிதத்தைப் போடுகிறார்கள் என்று . . . மணி மூன்றுசி விடும் . . பிரதிநிதிக்கு அந்தத் தோட்ட தலைவர் மேலே பொல்லாத கோபம் வரும். அவராகவே பைல்களைப் புரட்டிக் கொண்டு ''டாம் இடியட்ஸ் . . . லேபர் கிளாஸ் பகர்ஸ் . . . டோன்ட் ஹாவ் பங்சுவால்டி டிஸ் அப்பொயின்ட்டிங் புறூட்ஸ்'' என தோட்டக் கமிட்டியை ஏசுவார் அந்த தொழிலாளர் நலனுக்காகச் செயலாற்றும் விசித்திர மனிதர்! ஏசி முடிந்ததும் . . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர் சங்கரன் . . . என்று அவருடைய அசிஸ்ட்டன்டை அழைப்பார் . . . . அவர் வந்ததும் "See the Annasi Thottam baggars didn't come yet" என்பார். 'சார் . . . இன்னைக்கித் தானே அந்த லெட்டர் போஸ்ட் பண்ணினோம் . . . அவுங்க எப்படி இன்னைக்கி வருவாங்க . . . என்பார் அஸிஸ்ட்டன். இதைக் கேட்டதும் ஆங்கிலத்திலும் அரைத்தமிழிலும் உதவியாளரை காரசாரமாய்ப் பேசுவார் பிரதிநிதி. பின்பு உதவியாளர் பணம் விசயமாக பிரதிநிதி நடந்துகொண்ட நடத்தையினால் (அது பரம ரகசியம் சொல்வது . . . சரியல்ல) தான் ஒரு சதம் கூட இல்லாமலிருந்து அடுத்த தோட்ட தலைவரிடமிருந்து பத்து சதம் வாங்கி போஸ்ட் பண்ணியதை விளக்கிய உடன் . . . விசயத்தை மிஞ்ச விடாது "Oh . . . I am sorry" என்று முடித்துக்கொள்வார் பிரதிநிதி. அன்றைய தினம் அதோடு முடிவு பெறும்.

கான்பரன்ஸ்க்கு மூந்திய நாளே பிரதிநிதி பழைய பைல்களையும், தேவையான புள்ளி விபரங்களையும் எடுத்து மத்தியக் கமிட்டிக்கு விபரத்தைச் சொல்லி மாபெரும் தலைவரை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்வார்

**தோட்டக் கமிட்டி:** ஜில்லாப் பிரதிநிதியிடமிருந்து வந்த கடிதம் கிடைத்ததுமே தோட்டக் கமிட்டி தலைவர் . . . தனது தலையில் கட்டியிருக்கும் லேஞ்சை எடுத்து உதறி கொழுந்து நிறுக்கும் கணக்கப்பிள்ளையைப் பார்த்து ஒரு பெரிய கனைப்பு கனைத்துக்கொண்டே 'இன்னைக்கி மட்டுந்தானே கணக்கன் வாலாட்டுவான் நாளைக்குப் பெறகு நம்ம சங்கத்திலே பேசி கணக்கனை ஒருகை பார்த்துக்கொள்ளவேண்டும்.'' என்று கூறிக்கொண்டு கடிதத்தை ஒரு கையில் பிடித்த வண்ணம் (மற்றவர்கள் பார்க்கவேண்டுமே என்பதற்காக) போவார். தொழிலாளர் முகத்திலெல்லாம் ஒரே மகிழ்ச்சி. எல்லாத் தொழிலாளர்களும் ஒரே மகிழ்ச்சியுடன் சற்றுத்தெம்போடு நடைபோட்டுக்கொண்டு வருவார்கள்.

லயத்திற்கு தலைவர் வந்ததும் ஒரு ஆளை விட்டு (ஓடும் பிள்ளை) எல்லா லயத்தில் உள்ளவர்களுக்கும் கான்பிரன்ஸ் சங்கதியை எடுத்துச் சொல்லவைப்பதோடு பிரச்சனை உள்ளவர்கள் அனைவரும் தலைவர் வீட்டில் வந்து கொடுத்துவிட்டுப் போக வேண்டுமென ஒற்றைத்தப்பும் அடிக்கப்படும். ஆடித் திருவிழாவிற்கு சாமி தூக்கிக்கொண்டு போகும் உற்சாகத்தில் இருப்பது போல எல்லாத் தொழிலாளர்களும் தலைவர்வீட்டுக்கு வந்துவிடுவார்கள், வருபவர்களுக்கெல்லாம் தேநீர், வெற்றிலை பாக்கு கொடுக்கப்படும். தலைவர் மனைவி பெருமையோடு வந்திருப்பவர்களைப் பார்த்துக்கொண்(

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. . . என் புருஷனும் பெரிய தலைவன்தான்—என்ற எண்ணம் பிரதி பலிக்கும் வகையில் புன்முறுவல் பூப்பாள் . . . தலைவருக்கோ இந்த நிகழ்ச்சியெல்லாம் தலைசுத்து மளவுக்குப் பெருமையாக இருக்கும். காரியதரிசி தனக்குத் தெரிந்த அளவு பிரச்சனைகளை அரைகுறை யாக எழுதித் தள்ளுவார். தலைவருக்கு அன்று இருபத்தைந்து ரூபாய் காலி! எல்லாத் தொழிலாளர்களும் தலைவரிடம் தங்க ளது முறையீடுகளைச் சொல்லிவிட்டுப் போவார்கள். காரியதரிசி யும் கமிட்டி அங்கத்தினர்களில் ஒரு சிலரும் பிரச்சனைகளை எழுது வார்கள். பிறகு கமிட்டியில் பல பிரச்சனைகளை கமிட்டி முதல்வர் எடுத்துரைப்பார். எல்லாம் எழுதிய பின்பு அனைவரும் தலைவரிடம் விடைபெற்றுக் கொண்டு போவார்கள். சற்றுத் தொலைவிலுள்ள வர்கள் தலைவர் வீட்டிலேயே தங்கிவிடுவார்கள். விடிந்தால் திகதி இருபத்திரண்டு.

ஜில்லாவிக்குப் போவதற்காக அதிகாலையிலேயே எழுந்து விடு வார்கள். கமிட்டியில் உள்ள ஒருவன் எழுந்து வந்து தலைவர் வீட் டுக் கதவைத் தட்டுவான் . . . அப்பொழுது மணி மூன்றாகும். 'அய்யா தலைவரையா . . . ஐயா . . . ஐயாவ் . . . . ஐயோ . . . . தலைவரய்யா என்னுங்க இன்னுமா தூங்கிக்கிட்டிருக்கிறீங்க . . . . எந்திரிங்க . . . மணி மூனுச்சு . . . பஸ்சுக்கு நேரமாச்சி . . . எந்தி ரிங்க தலைவரே . . . ''

''ஆ . . . கருப்பண்ணு . . . மறந்துட்டேன் ராத்திரி ஒரு மணிக்குப் படுத்தது தூக்கம் வந்திருச்சி . . . அலுப்புவேறே . . . . . (மனைவியைப் பார்த்து) இந்தாள . . , சொர்ணம் எந்திரிச்சி அடுப்ப மூட்டு . . .

'என்னங்க . . . மொதக்கோழி கூவயிலேயே எழுப்பிட்டீங்க.'

'அடி . . . , எந்திரிடி . . . இன்னக்கி ஜில்லாவுக்குப் போவனு ம்ல . . . பஸ் வந்திடும்' இப்படி ஒவ்வொரு லயத்திலும் பேச்சுகள் நடக்கும். சர்வவேலைகளையும் முடித்துக்கொண்டு எல்லோரும் . . . காலை ஆறு மணிக்குள்ள பஸ்சுக்கு . . , காலை நான்கு மணிக்கே வந்து நிற்பார்கள், தலைவர் தன் மனைவியின் காதிலுள்ள ஓலையை அன்றைய செலவிற்காக வசதிசெய்து கொள்ள, கொண்டு வருவார்.

காலை ஒன்பது மணிக்கு ஜில்லாக் காரியாலயத்தில் நுழைவார் கள். கையில் புத்தகமும் பையுமாக வந்தவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ஓர் வாங்கில் அமர்ந்து பிரதிநிதி வருகைக் காகக் காத்திருப்பார்கள். பிரதிநிதி சரியாக பத்து மணிக்கு வரு வார். அவர் வந்ததும் எல்லோரும் எழுந்து வணக்கம் செலுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். இனி பிரதிநிதி தன் கை வரிசையைக் காட்ட தொடங்குவார். தலைவர் தான் கொண்டு வந்த சிகரட்டை பிரதிநிதியிடம் கொடுப்பார் சற்று கௌரவத்தோடு. பிரதிநிதி அகமும் முகமும் மலர அதை வாங்கி பற்றவைத்துக்கொண்டு பிரச்சனைகளைத் தயாரிப்பார். கக்கூஸ் வசதியிலிருந்து சில்லறைக் கங்காணி காளிமுத்து சின்னமுனுசாமி வேலைநீக்கம். கொட்டைப் பிடுங்குக்கு ஆள் விரட்டியது. கவ்வாத்தாட்களுக்கு அதிக ரேட். லயங்களுக்கு ஓட்டையடைத்தல், ஆடு வளர்த்தல், போன்ற பிரச்சனைகளை துருவித்துருவி ஆராய்ந்து எழுதியதும், மாதர் சங்கத் தலைவியை கேள்விமேல் கேள்வி கேட்டு பேருக்கு மேல் எடுக்கும் ருத்துக்கு எட்டு சதம் வேண்டும் என முடித்து பெருமூச்சோடு முடிப்பார். இதற்கிடையில் தலைவர் கணக்கில் டீ சப்ளை நடக்கும். பிரதிநிதி எமன்விழுங்சி இதுதான் சமயமென மற்றதையும் பார்த்துக் கொள்வார். அங்கு வந்தவர்களுக்கெல்லாம் தோட்டத் தலைவர் கணக்கில் தான் சாப்பாடு . . . !! பிரதிநிதியும் சிப்பந்திகளும் தோட்டத் தலைவரோடவே சேர்ந்து சாப்பாடு அடிப்பார்கள் . . . பிரதிநிதியைத் தலைவர் தனியாக தண்ணியோடு கவனித்துக்கொள்வார். நகையை அடைவு வைத்து வாங்கிய பணம் முக்கால் வாசி காலி . . .

மாலை மணி ஆறு வரையும் ஜில்லா ஆபிஸில் வேலை மும்முரமாக நடக்கும். பகல் சாப்பிட்ட சாப்பாடு செறிப்பதற்காக வேலை வேண்டும் தானே ! வேலைகளெல்லாம் முடிந்ததும் . . . வந்தவர்களை ஜில்லாவிலேயே தங்க வைத்துவிட்டு . . . பிரதிநிதி தலைவரை மாத்திரம் கூட்டிக்கொண்டு 'குளிரைப் போக்க வழி தேடி' போவார். மற்றவர்கள் படம் பார்க்கப் போய் விடுவார்கள். அன்றிரவு கிட்டதட்ட நூறு ரூபாய்க்கு மேல் செலவாகி விடும்.

இருபத்தி மூன்றும் திகதி காலையில் ஜில்லா அலுவலகம் எக்கச்சக்கமான முறையில் கலாதியாக யிருக்கும். ஜில்லாப் பிரதிநிதி வழக்கத்துக்கு மாருக நேரத்தோடு வந்திடுவார். கோர்ட்டும் சூட்டும், சிகரட்டும் அவர் ஓர் ஆங்கிலேய பிறப்பு என்பதை காட்டுவதாகயிருக்கும். அன்று அவரைப் பார்த்து மற்ற தொழிலாளர்கள் பேசக் கூடப் பயந்து நிற்பார்கள்.

மத்தியக் கமிட்டியிலிருந்து தலைவர் வருகிருர் என்ருல் விளையாட்டா என்ன ? தலைவர் வருகிருரென டெலிபோன் மூலம் எல்லோருக்கும் தெரிவிப்பார் பிரதிநிதி . . . நேரம் பத்தாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் வந்தபாடில்லை. பின் எல்லோரும் ஜில்லாவிலிருந்து பிரதிநிதி முன் சொல்ல தொழிலாளர்கள் பின் செல்ல லேபர் ஆபீஸ்க்குப் போவார்கள் . . . . இவர்கள் போர லட்சணத்தை வீதியே பார்க்கும் ! ! லேபர் ஆபீஸிற்குப் போனதும் தோட்டத்துரையுடனும், முதலாளிமார்கள் பிரதிநிதியுடனும் நமது பிரதிநிதி பேசி பலமாகச் சிரிப்பார்கள். தோட்டத்துரை ஜில்லாப் பிரதிநிதியின் முதுகில் ஓங்கி தட்டுவார். இதைப் பார்த்த தலைவரும் தொழிலாளர்களும் தங்களையறியாமலேயே கைகொடுத்துக்கொள்வார்கள் . . . அவ்வளவு சந்தோசம்.

மத்தியக் கமிட்டி தலைவர்கள் வர சற்று நேரமாகுமென டெலிபோனில் செய்திவரும். இருவாரங்களுக்கு முன்பே கான்பிரஸ்ஸைப் பற்றி அறிவித்திருந்தும் அந்த தலைவர் தம்பிரான்கள் எவ்வளவு அக்கரையோடு வருகிறார்கள் என்பதை தொழிலாளர்கள் உணரமாட்டார்கள். அவ்வளவு பக்தி. தலைவ (யி) ர்கள் மேல். இதற்கிடையில் கான்பரன்ஸ் ஆரம்பித்து விடும். பிரதிநிதிதான் வெளிநாட்டுக்குப் போய் வந்த கதையை துரைக்குச் சொல்லிக்கொண்டு அங்கு அவர் நடத்திய நாடகத்தை சொல்லிக்காட்டுவார். வெளியில் நிற்கும் தொழிலாளர்கள், பிரதிநிதி பிரச்சனையைத் தான் காரசாரமாகப் பேசுகிறார் என்று அலாதி பிரியத்தோடு இருப்பார்கள். தப்பித் தவறி வெளிநாட்டில் பிரதிநிதியை எவனோ "Bloody fool you have no business to interfere in our welfare" இப்படி பேசியதாகவும் அதற்கு இவர் கொடுத்த மறுமொழியையும் சொல்லிக்கொண்டிருப்பார். இதில் 'பிளடி பூல்' (Bloody fool) என்ற வார்த்தையைக் கேட்ட தொழிலாளர்கள் பிரதிநிதி துரையைப் பார்த்து பிளடி பூல் எனக் கேட்டுவிட்டாரே இனி போதும்; எனப் பேசிக்கொண்டே ஒருவரோடொருவர் ரகசியமாக . . .

"அண்ணே ! பாத்தியா நம்ப பிரதிநிதி நம்ப தொரைப் பயலைப் பார்த்து பிளாடியன் பூல் என்று கேட்டுட்டாரே . . . அப்படியில்லையா கேட்டாலும் ஒரு கேள்வி கேட்கனும்"

"அடிசக்கே அப்படியா கேட்டாரு . . . அதுதானே நான் ராத்திரியே சொன்னேன் நம்ப பிரதிநிதி உட்டுக்குடுக்க மாட்டாருன்னு . . ."

"என்னண்ணே நம்ப பிரதிநிதி தொரைமாருங்களே இந்தப் போடு இங்கிலிசுலே போடுறாறு."

"அப்படி போட்டாத் தானே அவன் அடங்குவான்" இப்படி பேசிக்கொண்டிருப்பார்கள். பிறகு மத்தியக் கமிட்டித் தலைவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்து காணுததால் கான்பரன்ஸ் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கிவிடும். பிரதிநிதி அரைகுறையா போட்டு . . . கானு வெட்டு கவ்வாத்து வெட்டு பிரச்சனைகளையும் தெண்டம் போட்ட காசையும் பற்றி பேசி ஓய்வார். இவரின் கையாலாகாத தனத்தைக் கானும் நிர்வாகத்தினர் தங்கள் கொள்கையை வற்புறுத்திக் கொண்டு வென்று விடுவார்கள்.

கான்பிரன்ஸ் முடிய அரைமணி நேரமிருக்க மத்தியக் கமிட்டி தலைவர் காரில் வந்து இரங்குவார் தலைவரும் மற்றவர்களும் கைகளும் கால்களும் நடுங்க வணக்கம் செலுத்துவார்கள். தலைவர் வந்துவிட்டாரே என தொழிலாளர்களுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

மத்தியக் கமிட்டி தலைவர் கான்பரன்ஸ் நடக்கும் அறைக்குப் போனதும் . . . எல்லோரையும் பார்த்து தன் பற்கள் முப்பத்தி மூன்றும் தெரிய (கட்டிய பல்) சிரித்துக்கொண்டு அமர்வார். பிரதிநிதி பைல்களைக் கொடுத்துதான் பேசிய லட்சணத்தில் தோற்றுப் போன சில பிரச்சனைகளையும் சொல்லுவார். மத்திய கமிட்டி தலைவர் துரைமாரிடம் ஏதோ ஓரிரு பிரச்சனையை விட்டுக்கொடுக்கு மாறு கேட்பார். அவர்களும் 'இன்று போய் நாளைவா' என்னும் கம்பாரமாயண ராமன் பாணியில் ''இரண்டை விட்டுத் தாரோம் இனி வராதே கான்பரன்ஸ்க்கு'' என்று கூறிவிடுவார்கள். விட்டுக் கொடுத்த இரண்டு பிரச்சனையும் . . . (1) லயங்களில் பிள்ளைகளைப் பார்க்க ஓர் பிள்ளைகாரியும், வயது வந்த பத்துப் பிள்ளைகளுக்கு தற்காலிகமாக (Temporary basis) வேலை கொடுக்கவும், பெற்றுக் கொண்டதோடு தலைவர் வந்தது சரியாகிவிடும்.

கான்பரன்ஸ் முடிந்ததும் வெளியே வந்த தலைவர் பிராணை கையெடுத்து கும்பிட்டபடி எதிர்நோக்கும் ஓர் கூட்டம். இக் கூட்டத்தைப் பார்த்து தலைவர் ''நான் வாரத்துககு முன்பே எல்லாப் பிரச்சனையும் பேசியாகிவிட்டது. இருந்தும் நான் வந்த பயத்திலே நிர்வாகம் முக்கிய பிரச்சனைகளை (அவர்கள் கருதுகிறபடி) விட்டுக் கொடுத்தது. இனி அடுத்த கான்பரன்ஸில் மற்றதைப் பேசிக்கொள்ளலாம், எல்லோரும் போய் வாருங்கள்.

எல்லோரும் தலைவருடைய திறமையைப் பாராட்டிய வண்ணம் போவார்கள். தோட்டக் கமிட்டி தலைவர், மத்தியக் கமிட்டி தலைவர் காரிலே ஏறிவிட்டால் போதுமென்ற எண்ணத்தோடு பிரதிநிதி பின்னாலேயே நின்று காரில் ஏறிக்கொள்வார். எல்லோரும் பெரிய ஓட்டலுக்குப் போவார்கள் . . . தோட்டத் தலைவருக்கு தலை கால் கொள்ள முடியாத ஆனந்தம். தலைவரோடு காரில் வந்து அவரோடு அமர்ந்து சாப்பிடுவதில் . . . அந்த அப்பாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுசனுக்கு எங்கே தெரியப் போகிறது . . . பிரச்சனையிலே பல்ட்டி அடிச்சதை நிரப்புவதற்குத்தான் இந்த வேலைங்கிறதை.

கான்பரன்ஸ்க்கு வந்த தோட்டக் கமிட்டி தலைவரிடமிருந்து எண்பது (80) ரூபாயும் (மனைவியின் காதோலையை அடவுவைத்து வாங்கிய பணம்) ... லியாகிக் கடைசியில் வீட்டுக்குப் போகப் பணமில்லாமல் பிரதிநிதிக்கிட்ட பணம் வாங்கிக்கொண்டு போவார்.

இந்த நிலையில் இன்று மலையகத்தில் நடக்கும் திடீர் தொழிற் சங்க வாதிகளின் நடவடிக்கைகள் ஒருசில மாவட்டங்களில் நடந்து வருகிறது. இந்த நிலைமை நீடிக்கக் கூடாது . . . என்ற நல்ல எண்ணம் ஒரு சில வாலிப வயதுடைய தொழில் இயக்கத் தோழர்களுக்கு இருக்கின்றது. இருந்த போதிலும் அவர்கள் எதையும் எடுத்துச் செல்ல முடியாமலிருக்கிறார்கள். காரணம் அவர்கள் அப்படிச் செய்தால் வேலை காலியாகிவிடும். எனவே இந்த நிலைமைகள் நீடிக்காமலிருக்கத் தொழிற் சங்கத் துறையில் மலையக மக்கள் மீது உண்மையான பற்றும் பாசமும் கொண்ட தோழர்களுக்கு வழிகாட்டவும் ஆதரவு தரவும் தொழிலாளர்கள் முன்வர வேண்டும்.

நான் குறிப்பிட்டுள்ள எமன் விழுங்கியாரைப் போல பிரதிநிதிகள் யாரையாவது குறிக்கும் நோக்கத்தோடு எழுதவில்லை. நீங்கள் திருந்தி, செத்து மடிந்து கொண்டிருக்கும் மலைநாட்டானை உணர்ச்சியும் ஆர்வமும் உள்ளவனாக்கி சிறந்த உரிமைப் போருக்கு தயார் செய்யும் தளபதிகளாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் எழுதினேன்.

வாழ்க தொழிலாளி !
வாழ்க மலையகம் !!

---

## அன்பு.

அன்பு என்பது தேனைப் போல. அதை நுகரவும் ஈ அதிலேயே ஒட்டிக் கொள்ளும்.

* * * *

அன்பு தான் இவ்வுலகில் உள்ள கடவுள்.

* * * *

சமூக சேவை என்பது அன்பின் பரந்த உருவம். தன் வீட்டினிடம் அன்பு செலுத்த முடியாதவன், தன் மனிதர்களிடம் அன்பு செலுத்த முடியாதவன், சமூகத்தினிடம் அன்பு செலுத்த முடியாது. [கண்டேகர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படிப் பாட....?

— அங்கையன் —

வானை நோக்கிப் பறக்கின்றேன்
வாழ்விழந்த நம்மவரின்
ஈனமிக்க செயலாலே
இளைத்துவிட்ட கோடுகளை
மோனம் பெரு வெளியில்
நெஞ்சங் கடுகடுக்க . . .

மனிதனை மனிதனாக
மதிக்கவே தெரியாத
மனிதரும் மானிலத்தில்
வாழ்கின்றார் பார்க்கின்றேனே!

வெண்மதியை இங்கிருந்து
மின்விசையில் நாடுகின்றார்
கண்ணிழந்து கருத்தழிந்து
காண்பணவும் ஒன்றின்றி
எண்ணங்கள் பலகோடி
எண்ணியெண்ணி ஏமாந்தும்
பண்ணுகிறார் பாரினிலே
பார்க்கின்றேன் நானுமிங்கே.

கற்புஎன்று பேசிடுவார் கற்பினையே விலைகொள்வார்
அற்ப செயல்களிலே ஆயுளையே அழித்திடுவார்.
விற்பன ரென்றுதமை விருப்புட னழைக்கு (ம்)
அற்பரை என்னசொல்லி அழைத்து நான்
கவி பாட?

* * *

தாமரை சேற்றிலும் தண்ணீரிலும் முளைக்கிறது. ஆனால் அதை மலர்விப்பது யார்? ஆகாயத்திலுள்ள சூரியன்; சேறு தாமரையை வளர்த்தது என்பதற்காக யாரும் அதை ஒடித்துச் சேற்றில் போடுவதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டு மக்கள் விழிப்புணர்ச்சிக்கு எழுத்தாளர் பணி அவசியம்!

— டாக்டர் கே. டி. கே. பிள்ளை —

மலையகத்தில் சிறந்த எழுத்தாளர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கின்றனர், இவர்கள் நமது மக்களை ஊக்குவிக்கும் வகையில் அரசியல், பொருளாதாரம், சமூக சீர்த்திருத்தம், சுகாதாரம், அறிவியல், பொறியியல், கைத்தொழில் முதலானவற்றில் அக்கறை செலுத்தி எழுதாமல் அலட்சியத்துடனிருந்து வருகின்றனர். விரல் விட்டு எண்ணக்கூடிய சில மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆங்காங்கு இருக்கின்றார்களெனினும், பெரும்பான்மையான எழுத்தார்கள் மலையகத்து மக்களை எழுச்சிபண்ணக் கூடிய கதை நாடகம் இவைகள் வரைவதில் ஆர்வம் கொள்வதில்லை. ஆனால் தேவையின்றி சம்பிரதாயங்களைப் பற்றியும், பஞ்சபாண்டவர் வனவாசம் பூலோக ரம்பை, அல்லிமாலை, விக்கிரமாதித்தன் கதை இவைகள் போன்ற பனுவல்களைப் படித்து அவற்றை விமர்சனம் செய்வதிலும், சிறப்பியல்புகளை எடுத்தியம்புவதிலும் காலத்தை வீணாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

இப்படிப்பட்ட நூற்களைப் படிப்பதிலும், அவற்றை விமர்சனம் செய்வதிலும் காட்டுகின்ற ஆர்வம் திருக்குறள், நாலடியார், அகநானூறு, சிலம்பதிகாரம், தொல்காப்பியம் போன்ற ஏடுகளைப் படிப்பதிலும், விமர்சனம் செய்வதிலும், மலையகத்து மக்களை நல்வழியில் இட்டுச் செல்லக் கூடிய விடயங்களை ஆய்வுபண்ணி வெளியிடுவதிலும் கவனம் செலுத்தவில்லை. இதனால் நமது எழுத்தாளர்கள் காலமெல்லாம் எழுதிக்கொண்டிருந்தாலும் நம்மக்கள் மத்தியில் சுதந்திர வேட்கை ஏற்படவோ, அல்லது நல்வாழ்வு வாழ்வதற்கு வழி பிறக்கவோ போவதில்லை. இந்நிலையில் 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான், பாடியவன் பாட்டைக் கெடுத்தான்'' என்று சாதாரண மக்கள் கூறுவதிலும் ஆழ்ந்த கருத்துகளுமிருக்கத்தான் செய்கின்றது. அதாவது மக்களுக்கு நன்மை ஏற்படாத ஏடும், கருத்தாழமுள்ள பாடல்களும் இசை நயமின்றி பாடினால் கேட்பவர்களுக்கு இனிமையாகவிருப்பதில்லையோ அதுபோலவே தான மலையகத்தில் ஒரு சில எழுத்தாளர்களின் நிலையுமிருக்கின்றது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் ஞாலத்தை அழிக்க விழையும் பயங்கர ஜலவாயுக்குண்டுகள் தயாரிக்கப்படும் காலம். அதுவும் ருஷ்யரும், அமெரிக்கரும் சந்திரமண்டலத்தியலை கண்டு களித்துக் கொண்டிருக்கும் காலம். இத்தகைய விஞ்ஞான உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோக ரம்பை கதையிலிருந்து விக்கிரமாதித்தன் கதைவரை ஆய்வுபண்ணிகொண்டிருப்பதனுல், நன்மை ஏற்படுமோ என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதுமட்டுமல்ல, இந்நாட்டில் பிறந்து வளர்ந்த மக்கள் ''நாடற்றவர்கள்'' என்ற அவமான சின்னத்தோடு நமது மக்கள் வாழ்வற்ற வாழ்வு வாழ்ந்துக்கொண்டிருக்கிறுர்களென்பதை மறந்து விடாது, காலத்தையும் மலையகத்து மக்களின் சூழ்நிலையையுமறிந்து எழுத வேண்டியது இன்றைய எழுத்தாளர்களின் கடமையாகும்.

மேலைநாட்டில் பல நாடுகள் அடிமையிலிருந்து விடுபட்டு சுதந்திர இனமாக வாழ்வதற்கும் அம்மக்களை பல்வேறு மறுமலர்ச்சி துறையில் இட்டுச் செல்வதற்கும் ரூசோ, பிளேட்டோ, சோக்கரற்றிஸ், ஆப்ரகாம்லிங்கன் போன்ற அறிஞர்களின் எழுத்துப் பணி துணைபுரிந்திருக்கிறதென்பதை வரலாற்றின் வாயிலாக அறிகிறோம். ஆகவே, மலைநாட்டு மக்கள் பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ள இச்சூழ்நிலையில் நமது எழுத்தாளர்கள் பண்டைய இதிகாசங்களைப் பற்றி விமர்சனம் செய்துக்கொண்டிருப்பதனுலோ, அல்லது பகுத்தறிவற்ற விடயங்களை எழுதிக்கொண்டிருப்பதனுலோ மலையகத்து மக்களிடையே விடுதலை உணர்ச்சியை உண்டு பண்ணப்போவதில்லை. இதனுல் சிந்தனை தெளிவின்றி அறிவிலிகளாக விளங்கும் மக்களை சிந்திக்கச் செய்யவோ, அல்லது பகுத்தறிவோடோ வாழ்வதற்கு வழி பிறப்பதில்லை.

எனவே, மேலை நாட்டு எழுத்தாளர்கள் மக்களை விழிப்படைய பணியாற்றியதுபோல் இன்றைய எழுத்தாளர்கள் மலையகத்து மக்களிடையே சுதந்திர வேட்கையை உண்டு பண்ணவும், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று முதலானவற்றை உண்டுபண்ணவும் கதை, கட்டுரை, கவிதை, நாடகம் இவைகள் வரைந்து மலையகத்து மக்களை தட்டி எழுப்ப வேண்டும். இப்படிப்பட்ட எழுத்துப்பணியை செய்வதற்கு இன்றைய எழுத்தாளர்கள் முன் வந்தால் மலைநாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்கு வழிபிறக்கும் என்பதில் ஐயமில்லை.

* * * *

சிறு குழந்தை ஓட ஆரம்பித்தால் அது எங்கே விழுந்துவிடுமோ என்று அஞ்சுகிறது தாயின் உள்ளம். ஆனுல் பெரியவனுகிவிட்டால் அவன் ஏதாவது பெருஞ் செயல் செய்ய வேண்டும் என்று அதே தாயுள்ளம் விரும்புகிறது.

* * * *

பயனை எதிர்பாராத அன்பு உலகத்தில் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலைமுரசு வழியாக" சென்ற முறை நான் உங்களைச் சந்தித்தபோது, எனக்குக் கீழ் படிக்கும் மாணவர்கள்—மலைநாட்டின் எதிர்கால செம்மல்கள்—வழி நடத்தும் காளையர்கள் பற்றி எழுதி, பின் அவர்களின் வழிகாட்டிகள்—உருவாக்கும் உத்தமர்களாகிய உங்களின் கடமைகளில் சிலவற்றைப் பற்றியும் எழுதியிருந்தேன். ஆனால், சென்ற இதழில் தங்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. மனம் வருந்துகிறேன். மேலும் மேலும் என் உற்ற நண்பர்களாம் உங்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைப்பதையிட்டு மனம் மிக மகிழ்கிறேன். நம் 'மலைமுரசின்' ஆசிரியர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்—நாம் அவர்களுக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம்—ஆம்! நம் ஆக்கத்துக்காக அயராது ஊக்கம் எடுக்கும் செம்மல்கள் அவர்களன்றோ!

ஓ....எதிலோ தொடங்கி எங்கோ போய் விட்டேனே. மன்னிக்க வேண்டும்...

ஆமாம். நான் அன்று ஒரு தமிழ்ப்படம் பார்ப்பதற்காக இங்கு இப்பகுதியிலுள்ள ஒரு 'தியட்டரு'க்குப் போயிருந்தேன். அதுவும் இரண்டாவது 'ஷோ'—காட்சி....முதல் காட்சி முடிவடைந்து வெளியேறியவர்கள் முழுக்க முழுக்க நம் தோட்டத் தொழிலாளத் தோழர்கள். சரி! சினிமா காட்சிகள் நமக்குத் தேவைதான் ஏற்றுக் கொள்கிறேன். உழைத்து உழைத்து உருக்குலைந்து போகும் நம்மவர்கள் உல்லாசமாக, மனதுக்கு உற்சாகம் தர ஏதோ மாதமொரு முறையோ, இரு முறையோ—பண வசதி இடம் தரும் விதத்தில் பார்ப்பதில் தவறில்லை. குற்றமில்லை. ஏற்கிறேன். வரவேற்கிறேன். ஆனால்!—

நான் இரண்டாம் காட்சிக்குப் போனேன் என்றேன் இல்லையா! ஆனால், தியேட்டர்க்குள் கால் எடுத்துவைக்க முடியாது! கூட்டம் என்று எண்ணுகிறீர்கள்—அதுவல்ல!! ஆனல்—செருப்பு, சப்பாத்து ஏதாவது காலணி போடாமல் போனால் வழுக்கி விழ வேண்டியது தான்!

## மலைமுரசு வழியாக—

**ஏ. பி. வி. கோமஸ், பீ. ஏ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு பார்த்தாலும்—ஆசனங்கள் அடியிலும்—ஏன் தியேட்டரின் சுவர்களிலும் கூட சிவப்பு நிறம் ! செம்மல்களின் எச்சில் !.

''ஏது ! வெற்றிலே போடுவதைக் கூட இவர் எதிர்ப்பார்போலிருக்கு'' என்று நீங்கள் எண்ணலாம் ; இல்லே—நான் எதிர்க்கவே மட்டேன் ! ஏன் தமிழர் கண்ட ''இலட்சுமி'' களில் ஒருத்திதானே. இந்த வெற்றிலே ! ஆகையால் அவளை வாழ்த்துகிறேன் !

ஆனல்—பொது இடங்களை—நாலுபேர் வந்து போகும் நல்ல இடங்களை—பலரும்? பாங்கான இடங்களை அவள்—அந்த 'வெற்றிலே'—அம்மா இரத்தக் கறையாக்குவதைத் தான் நான் வெறுக்கிறேன்—வேண்டாம் என்கிறேன் !

தியேட்டர்—ஒரு உதாரணம்தான் ! ஆனலும் எத்தனையோ இடங்கள் உள்ளன ! உங்களுக்குத் தெரியாதா ! அந்தோ ! கோயில் கூடவா இதற்கு—இந்த அலங்காரத்துக்கு இலக்காக வேண்டும் ! தெய்வம் ஏற்குமோ என்னவோ ! ஏனெனில், 'தெய்வத் தன்மைக்கு அடுத்தது சுத்தம்' என்று ஆங்கிலத்தில் ஒரு நன்மொழியும் உண்டே !

வெற்றிலே என்றவுடன் சுண்ணும்பின் ஞாபகமும் வருகிறது ! அந்தோ பொது உடங்களின் சுவர்கள் அடைந்திருக்கும் கோலங்கள் ! ஏன், எம்பகுதி 'காங்கிரஸ்'—பொது மக்கள்—நம்மவர்கள் கூடும்—கட்டிடங்களின் சுவர்களில் கண்ணுேட்டம் செலுத்தினலே போதுமே ! ஒரு வேளை அவர்கள்—'கட்டிடத்துக்கு சொந்தக்காரர்கள் வெள்ளையடிக்க மாட்டேன் எனகிறுர்களே' என்று இப்படிச் செய்கிறுர்களோ என்னவோ ! வாழ்க அவர்கள் !

எது எப்படி இருப்பினும், தயவு செய்து நம் நண்பர்கள் எல்லாரும் இல்லாவிட்டாலும் நல்ல மனம் படைத்தோராவது இந்த விடயங்களில் கொஞ்சம் கவனம் செலுத்தி பொது இடங்களில், பழக வேண்டும் விதத்தில் பழகி நற்பெயர் எடுப்பார்களாக. சுத்தம் சுகம் தருவதால் நன் முறையில் நடந்து கொள்வார்கள் என்று எண்ணுகிறேன் !

மீண்டும் சந்திக்கலாமா ? வணக்கம்.

* * * *

தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தவுடனே குழந்தை அழ ஆரம்பிக்கிறது. அதை அழச் செய்வது எது? பசி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர் பகுதி

# தாய்மையின் தத்துவம்!

—மலர் ஈழக்குமார்.

கருத்தொருமித்த காதலரிருவரின் கண், கருத்து, மனம் யாவற்றையும் கொள்ளை கொண்டு மெய்சிலிர்க்க வைப்பது அவர்கள் அன்புச் செல்வமாகிய குழந்தை. இல்வாழ்வின் இன்ப ஒளியினை பிரகாசமுறும்படி ஏற்றிவைப்பது யாழுடன் குழலினிமையையும் வெல்லத்தக்கதான தேன்மழலை மிழற்றும் குழந்தை உருவே.

முதலில், தாய்மை எனும் உன்னத ஸ்தானத்தை எட்டிய பின்னரே பெண்ணனவள் வாழ்வின் பூரணத்துவத்தை அடைகிறாள். மக்களிடையே, சமூகத்தில் ஓர் தனி இடமுண்டாகின்றது அத் தாய்க்கு. மிதமிஞ்சிய பொறுப்புடன் கூடிய அன்புணர்ச்சி, பொறுமை, தியாகம் ஆகிய மகத்தான கடமைகள் யாவும் அவள் மனதாலும் செய்கையாலும் அன்பின் சிகரமனெ மிளிர்கிறது. உயிர்குலம் தழைத்தோங்க உதவிபுரியும் மகத்தான சக்தி அது! அவளுக்கே தனி உரிமை!

ஒப்புவமையற்ற தாய்மைப் பேற்றை ஆவலுடன் எதிர்நோக்கும் ஒரு பெண் மனதில் தன்னுயிர்ச் செல்வம் மதலைப் பருவத்தில் எப்படியெல்லாம் இருக்க வேண்டும், அதைத் தாலாட்டி சீராட்டி அமுதூட்டி அழகுப்படுத்திப் பார்ப்பது, கண்ணில் ஒளிரும் மணியென பேணிக்காத்து வளர்த்து, நல்லறிவாகிய கல்வியறிவிற் சிறக்க பள்ளிக்கனுப்புவது பற்றியெல்லாம் செயல்படவேண்டிய பல எண்ணற்ற இன்ப எண்ணங்களை மனதில் அடுக்குகிறாளே! பின்னும் அப்பேறுபெற்று கட்டிளமைப் பருவத்தைப் பிள்ளைகள் அடைகின்ற போதில் அன்னையவள் பெறும் இன்பத்திற்கு எல்லையுண்டா? அருஞ்செல்வமாகிய கல்வியறிவிற் தேர்ச்சி பெற்று பொது வாழ்வில் ஈடுபட்டு திருமணமெனும் இன்பப் பூங்காவில் தன் இணையுடன் வாழ்வின் சுவையை உணர்ந்து உண்ணத்துடிக்கும் அப்பராயத்தில் மக்கள் பெருமை, வரப்போகும் மருமக்கள் பற்றிய இன்பக் கனவுகளில் லயித்து பூரிப்படைவதே தாய்மாருக்கு இயற்கை

மணமும் நிகழ்ந்தவுடன் மகன் மருமகள் இன்ப வாழ்வைப் பார்த்து ஓர் திருப்தி பின்னும் அவர்கள் இல்வாழ்விலோர் இன்பக் கனி, மிக மிக சீக்கிரமே தோன்றல் வேண்டும், மெத்தென்ற செல்வக் கனியை தான் மனம்நிறை ஆசையுடன் அள்ளியணைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சி விளையாடி மகிழ வேண்டுமென்ற உயர்வான எதிர்பார்ப்பு யாவற்றுக்கும் ஓர் மாதாவின் ஆச்சரியமிகு அன்பே பிரதானம்! தன் இறப்பு வரையில் மக்கள் வளர்ச்சி, அவர்கள் சுகதுக்கத்தில் தானும் பங்கேற்கும் ஆற்றல், அவர்கள் வாழ்வின் முன்னேற்றத்தில் அக்கறை, பிள்ளைகளின் பிள்ளைகள், அவர்கள் பிள்ளைகளையும் தான் கண்ணுறக் கண்டு பூரிப்பெய்தவேண்டுமென்ற உயர் அவர்கள் உண்மையானதோர் அன்னையின் அன்பிதயத்திலிருந்தே பிரவாகமெடுக்க முடியும்—இதுவே எவ்வுயிரும் போற்றத்தக்கதான அன்னையின் மாறாத நிலையான அன்பு.

கடற்கரையிலுள்ள கூழாங்கற்கள் பெரிய அலைகளால் ஓயாத அலைசடிபட்டு, அடிபட்டு, அங்குமிங்கும் உருண்டோடி, ஒன்றி லொன்று உரசித் தேய்க்கப்படுவதாலேயே உருண்டை வடிவு பெற்று பளபளப்பான பிரகாசமிகு கற்களாகின்றன. கரைக்குச் சென்று அவற்றைக் காண்பவர்களுப் அதன் வடிவை மெச்சி அவ வழகிய பாற்கற்களைச் சேர்த்து இல்லங்களில் அலங்காரப் பொருளாக வைக்கின்றனர். இதே சமயத்தில் கரையை அடுத்த கரும் பாறைகளுக்கும் அப்பால் வடிவம் பெறாது கரடுமுரடானதும் அழகற்றதுமான கூழாங்கற்கள் அனேகமாயுள்ளன. இவை அலைமோதுதலினால் அடிபட்டு உராய்ந்து சுத்திகரிக்கப்படாமையே காரணம். இது போன்று, சாதாரணமாக பிள்ளைகளிடத்தே காணப்படும் குற்றங்களையும் மீறுதல்களையும் நீக்கி அவர்களை விலையேறப்பெற்ற குடிமக்களாக்கும் பொருட்டே அன்புத் தாயானவளும் அடிக்கிறாள் சிட்சிக்கிறாள். சிறுவயதில் அனேக பிள்ளைகளுக்கு தாயாரின் பிர அன்பின் அடிப்படையில் தாம் பெறும் சிட்சைகள் பெரும் தொல்லையாக, துன்பம் தருவனவாக தோன்றினும் பிற்காலத்தில் தாய் தன்னைக் கண்டிப்பாய் வளர்த்ததன் காரணத்தை உணர்ந்து கொள்வர். அதிக செல்லம் காரணமாக சிட்சையின்றி வளரும் பிள்ளைகளின் எதிர்காலமோ கரைக்கு அப்பால் முரட்டுவடிவத்தில் எவராலும் வேண்டப்படாத கூழாங்கற்களுக்கு சமம்.

பொதுத் துறையில் ஈடுபட்டு மேன்மையான பதவி பல கிட்டியமைக்கு தங்கள் தாய்மாரின் அன்பு வளர்ப்பும் மாதிரியுமே காரணமாயிருந்ததென பல பெரியோர் சாட்சி பகன்றுள்ளார்கள். வட இந்தியாவில் சிறந்த பொதுத் தொண்டரும் பக்திமானுமாகிய சாது சுந்தர் ஸிங் என்பவர் வேதசாஸ்திரக் கல்லூரியிற் சேர்ந்து (Theological College) பயிற்சி பெறும்படி வற்புறுத்தப் பட்டபோது அவர் அன்பிலும் அறிவிலும் சிறந்து விளங்கிய தன் அன்னையாரைச் சுட்டிக்காட்டி, ''நான் இவ்வுலகிலுள்ள, யாவற்றுக்கும் மேலான கலாசாலையில் சாஸ்திரப் பயிற்சி பெற்றிருக்கிறேன். அது என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் நெஞ்சமே'' என மனம் நெகிழ்ந்து கூறி நின்றாராம். ஒப்பற்ற தாயன்புக்கு அஞ்சலி செய்யுமுகமாக உலகெங்கினும் ஆண்டு தோறும் ஒரு குறித்த நாளில் 'தாய்மார் தினம்' ('Mother's Day') விழாவெனக் கொண்டாடப்படுகிறது.

குடும்பத்தில்; தந்தையின் ஸ்தானத்தை தந்தை ஏற்க, ஒரு நல்ல தாயானவளே தீமையை அகற்றி நல்லவற்றில் நாட்டம், நாட்டிந்த பெரியார்களின் வாழ்வின் சம்பவக் கோர்வையினை அவர்கள் இள மனதில் எளிதில் பதியக் கூடிய வண்ணம் சிறு சிறு கதைகளாக்கிக் கூறுவதன் மூலம் வரலாற்றில் தெள்ளிய அறிவு, உயர் எண்ணங்கள், அஞ்சாமை, மனிதப் பண்பு எனபவற்றில் குழந்தையைப் பயிற்றுவித்து எதிர்காலத்தில் நற்குடி மக்களாக்கும் பெரும் பங்கை ஏற்கிருள். வரலாற்றிலும் கூட வீரதீர புருஷர்களை ஈன்றெடுத்த அன்னையரின் பெருமை, பொறுமை, வீரம், தியாகம் ஆகிய அருங்குணங்களின் மகத்துவம், கடமையில் உறுதி யாவும் புகழ் பெறக் கூறப்பட்டுள்ளனவே

'கடவுள் எங்குமிருக்க முடியாது, எனவே தாய்மாரை சிருஷ்டித்தார்' என்பர் பலர். இப்பேர்ப்பட்ட தாய்மாரை மக்கள் யாவரும் மதிக்கிறார்களா ? பாசத்தை நன்கு அறியாமலும் அதன் அருமையை உணர்ந்து மதியாமலுமிருக்கும் பிள்ளைகள் தொகையோ ஏராளம். உண்மை அன்புடைய ஒரு தாயானவள் வளர்த்த தன் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதுவும் அன்பு ஒன்றைத்தான். இதுவும் கிட்டாத நிலையில் அவளுக்கு அதைவிட நிர்ப்பாக்கியம் வேறு எதுவுமில்லை தான் படாத துன்பமெல்லாம் பட்டு சகித்து, வளர்த்தெடுத்த குற்றத்திற் கென்று வேறு எந்த விதமான பிரதியுபகாரத்தையோ கைமாறையோ உண்மையுள்ள எத் தாயும் வேண்டுவதில்லை.

சிறுவயதில் மட்டும் பிள்ளைகளை அன்பு பாராட்டி வளர்த்து, பெரியவர்களாகியதும் அவர்கள் இன்பமுடன் பெருவாழ்வு வாழ்வதைக் கண்டு சகியாது, மனம் பொறுக்காமல், சமூகத்தில் தனி இடம் பெற்றுள்ள தங்கள் செல்வர்களின் நன்மதிப்பைக் குலைப்பதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டு ஆங்காரமாய்க் கறுவித் திரியும் போலி அன்புடைய தாய்மாரும் சமூகத்திடை மறைந்திருக்கவே செய்கிறார்கள். தனக்கும் தன் மனைவி பிள்ளைகளுக்கும் இழுக்கைத் தேடித் தரும் இத்தகு தாய்மாரை பிள்ளைகளால் எப்படியும்—என்றைக்குமே—திருப்தி படுத்த முடியாது. இவர்கள் வரிசையில் சேர்க்கப்படவேண்டிய இன்னுமொரு சாரார் உள்ளனர். எப்படியென்றால் . . . இல்வாழ்வை ஏற்றும் ஓர் முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேனும் தாய்மையைப் பெற வெறுப்பவர்கள். தாய்மைப்பேற்றை அடைவதால் தமக்குச் சுயாதீனக் குறைவு, பொறுப்பு மிகுவதால் உடலின் அழகு கெட்டு, ஆராக்கியம் குன்றி, இளமை மறைந்து விடும் என்ற தன்னலத்தால், உருவாகும் சின்னஞ் சிறு உயிரை ஆரம்பத்திலேயே அழிக்கவும் மார்க்கந் தேடி அதில் தீவிரங்கொண்டுள்ள வன்னெஞ்சமுடைய பெண்கள்; குழந்தைகளில் பற்றற்ற இவர்களுக்கு எவ்வளவு செல்வமிருந்த போதிலும், வாழ்வில் எத்தனை வளமுடை வசதிகள் இருந்தபோதிலும் வளமற்ற வரண்ட பாலைவனம் போலவே ஏனையோரால் கருதப்படுவர்.

ஒரு பசுவும் கன்றும் நாள் பூராவும் மேய்ந்து விட்டு மாலையாகியதும் ஓர் நீரோடைக்கப்புறம் போய் நின்றுகொண்டிருந்தன. இரவு நெருங்கி வந்தமையால் உரியவன் வந்து அவற்றை வழக்கம் போல் அழைத்தான். பசு வரவில்லை. கொஞ்சம் பசும் புல்லை எடுத்துக் காட்டியும், பசு நிரம்பவும் புல் மேய்ந்திருந்ததால எஜமானிடம் வர மனதற்று அப்படியே நின்று கொண்டிருந்தது. உடனே உடையோன் நீரோடையைத் தாண்டி மறுபக்கம் போய் கன்றுக் குட்டியை தூக்கி வந்துவிட்டான். கணநேரத்தில் பசுவும் குதித்தோடி வந்துவிட்டது? ஏன்? எதற்காக! ஆறறிவற்ற மிருகத்திற்கும் உரித்தான ஒரே உரிமை—இதுவே தாய்ப்பாசம் கல்வியறிவிருந்தும், உடன் பொது அறிவிருந்தும் யாவுக்கும் மேலான இப் பிள்ளைப் பாசத்தை இழந்து நிற்கும் பெண்கள் வரிசை விலங்கினத்திலும் ஒரு படி தாழ்வாகவே—மாண்புறும் மக்களால், தாய்மையை விரும்பும் ஏனைய பெண்களால் மதிக்கப்படுவர். இத்தகு அன்பற்ற தாய்மார், கொடுமை நிறைந்த நெஞ்சமுடை பெண்களாலேயே உண்மைப் பாசமுடைய தாய்க்குலத்தைக்கூட சமூகம் மதிக்க மறுக்கிறது இன்று. உண்மையன்பை நன்குணர்ந்து தெரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்த பிள்ளைகளோ தாயைத் தெய்வமெனப் போற்றுகிறார்கள். வணங்குகிறார்கள்.

---

தியாகம், வர்ணம் பூசிய பீங்கான் தட்டன்று. கடலில் பொன்னைக்கொண்டுபோய்க் கொட்டுவது தானம் ஆகாது.

* * *

வேலை செய்ய வேண்டுமானால் மனிதன் பைத்தியமாகிவிட வேண்டும் என்பது உண்மையே. அதனால் அந்தப் பித்து அந்த யுகத்துக்கு பொருத்தமாகவும், முன்னேற்றத்துக்கு உதவி செய்வதாகவும் இருக்கவேண்டும். சமூகத்துக்கு அதிக இன்பத்தைதரும் வல்லமை அந்தப் பித்துக்கு இருக்க வேண்டும். வெறும் பித்துக்கு உலகத்தில் ஒன்றும் மதிப்பே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகள் இப்படி இருந்தால் நன்று, அப்படி இருந்தால் நன்று
என்று மனிதன் நினைவையொட்டித் தோன்றியவையல்ல ; தோன்
றப் போவதுமில்லை. தோன்றிய மலைகளுக்கேற்ப மனிதன் வாழ்ந்து
கொண்டிருக்கிறான், பொதுவக மலைகள் பெரிதும் பயனுடையன.
அதனாற் சிறப்புடையன. நாட்டின் தேவை முழுவதற்கும் வசதி
யாகச் சில சமயங்களில் இருக்கலாம். அப்படித்தான் இல்லாது
போனாலும் எப்படியாவது ஏதாவது ஒரு வழியில் பயனுள்ளன
வாகவே இருக்கும். ஒன்றில் வண்மை நலம் இருக்கும் அல்லது வலி
நலம் இருக்கும். ஆனால் கொண்
கான மலை இரு நலங்களையும்
உடையது என்று பாடிக்
கொண்கானத்துக் கிழானைச்
சிறப்பிக்கின்றார் மோசிகீரனார் :

## மறைநாளும் மலைநாடும்

— வி. கந்தவனம் பீ.ஏ

## 2

ஒன்றுநன் குடைய பிறர்
குன்ற மென்றும்

இரண்டுநன் குடைத்தே
கொண்பெருங் கானம்

வான்நின்று உலகம் வழங்கி வருவதால்
பல மலைகள், 'வான்நின்று உலகம் வழங்கி வருவதால்' [sic] 

தான் அமிழ்தம் என்று உணரப்படு' கின்ற மழைக்கு.
'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய' மழைக்கு. சிறப்பொடு பூசனையும்.
தானம் தவம்

இரண்டும் இவ்வையகத்தில் செம்மையாக நடைபெற உதவுகின்ற
மழைக்குக் காரணமான முகிற்கூட்டங்களைத் தடுத்து நிறுத்தி
மழையைப் பெய்விக்கின்றன. நாமிருக்கும் நாட்டு மலைகள்
இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். உலகத்திலுள்ள எல்லா
ஆறுகளும் ஏதாவது ஒரு மலையிலிருந்துதான் ஊற்றெடுக்கின்றன.
எனவே பெரிதும் மலைகள் நீர் வளம் உடையன; அதனால் பொருள்
வளம் உடையன. மன்னர்களின் கொடைவளமும் இதனால் சிறந்து
வளர்ந்தது. வறுமை ஒழிந்தது. வாழ்வு சிறந்தது

எனவேதான் சிறப்பான மலைகளையுடைய மன்னர்களைப் பெரி
யோர்கள் பெருமை கொண்டு பேசினர் ; சான்றோர்கள் என்றான்
றும் மதித்தனர் ; புலவர்கள் போற்றிப் புகழ்ந்தனர் ; வாழ்த்திப்
பாடினர் பெருஞ்சித்திரனார் என்ற சான்றோர் கடையெழு வள்
ளல்களைப் போற்றுகையில் பலரை மலையின் சிறப்புக்கூறிச் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கின்றார். வாரி வாரி வழங்கியதால் கனவிற்கூட மக்கள் பாரி பாரி என்று வாழ்த்திய பெரும்பேர் வள்ளலை,

முரசுக்கடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண நெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரி'' என்று பாடுகிறார்.

ஓரியை, ''கொல்லி யாண்ட வல்வில் ஓரி'' என்கிறார்.
அதியமானை. ''ஊரா தேந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி'' என்கிறார்

''ஈர்ந்தன் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகன்'' எனப் பேகனின்
மலையில் பெருமை பேசுகிறார்

கடையெழு வள்ளல்களுக்குக் காலத்தாற் பிற்பட்ட குமணனை,

''விசும்புறக் கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
கழைவளர் கவினிய பலவி ளர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ'' என்று தளராத புது வருவாயையுடைய முதிர மலையின் பெயரூற் போற்றுகிறார்.

''நளிமலை நாடன் நள்ளி''யை வன்பரணர் என்ற புலவர், ''கறங்குமிசை யருவிப் பிறங்குமலை நள்ளி'' என்றார்.

மலைகள் இவ்வளவிற்கு இயற்கைச் சிறப்புடையன. எனவே இலக்கியச் சிறப்புப் பெற்றன. சிறப்பான மலைகளுக்கெல்லாம் சிறப்பானது இமயமலை. உயர்வான மலைகளுக்கெல்லாம் உயர்வானதும் இதுதான். அண்ணாந்து பார்க்க முடியாத அளவுக்கு ஆகாயம்வரை நீண்டு நிமிர்ந்து வளர்ந்துள்ளது. இந்த நாட்களில் கலைஞர்களை மட்டுமல்ல அறிவுக்கண்கொண்டு பார்த்தவர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய உயரமுடையது. அதனால் சிவபெமான் வாழும் சிறப்பைப்பெற்றது. இது என்ன உயரமும் சிறப்பும்? வள்ளுவருக்கு இந்தச் சிறப்பும் உயரமும் பெரிதாகத் தெரியவில்லை. அவர் வேறு நோக்கோடு மலையைப் பார்க்கிறார். இதை விடப் பெரிய உயரமும் இதைவிடப் பெருஞ் சிறப்பும் வேறொரு இடத்தில் இருக்கிறது என்கிறார். விஞ்ஞானிகளைப் போல அளந்து நிறுக்கிறார்; காரணம் காட்டுகிறார். வேறொன்றுமில்லை; வேறு யாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை; மனிதன் தான். ஆனால் எல்லோருமல்ல. தன்னுடைய நிலையிலிருந்து வேறுபடாமல் அடங்கி ஒழுகுபவன் யாரோ அவன் தான். அவனின் உயர்வு மலையின் உயர்விலும் பார்க்க மிகமிகப் பெரியது என்கிறார் :

> நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
> மலையிலும் மாணப் பெரிது.

மலையிலும் மானப் பெரிது என்று ஏன் சொன்னார்? வானினும் மாணப் பெரிது என்று சொல்லியிருக்கக் கூடாதா? காரணம் இருக்கிறது.

இந்த நாட்களில் நாம் பார்க்கிறோம் மரத்துக்கு மரம் தாவும் மந்திகளைப் போல், மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம் தாவுகின்ற தன்மையர்கள் பலர் இருக்கிறார்கள். இன்று ஒன்று சொல்வார்கள். நாளை அதை இல்லை என்று நா கூசாமல் மறுப்புவார்கள். மரங்கள் காத்தடிக்கிற பக்கமாக சாயும். இவர்கள் பணம் அடிக்கிற பக்கமாகச் சாய்வார்கள். சாய்வார்களா? அந்தப் பக்கமாக ஓடியே போவர்கள்—பறப்பார்கள். பாடுகிற பக்கம் போடுகிற இவர்கள் வாக்கற்றவர்கள். அதனால் போக்கற்றவர்கள் சாய்ந்தாற் சாய்கிற பக்கமே சாய்கிற செம்மறி ஆடுகளாதலால் உறுதியற்றவர்கள். எதிலுமே நிலையில்லாதவர்கள் சகாராப் பாலை நிலத்தில் உள்ள புழுதியைப் போன்றவர்கள். இன்றைக்கு இங்கே இருப்பார்கள், நாளைக்கு அங்கே இருப்பார்கள். சொந்த நலத்துக்காக, அற்ப ஆசைக்காகச் சுய தன்மை இழப்பர்; மானத்தைத் இழப்பர்; மானத்தைத் துறப்பர்; இனத்தையே விற்பர்.

மலையைப் பாருங்கள்; ஆடாமல் அசையாமல் உறுதியோடு ஒரு நிலையாக நிற்கின்றது. மழை கொட்டட்டும்; இடி இடிக்கட்டும். நிலை நிலைதான்; இதைப்போலவே மனிதனும் இருக்க வேண்டுமென்கிறார் அறக்காவலர். ஆனால் ஒரே நிலையாக நிற்பது மலைக்கு இயல்பு. மனிதனுக்கு முடியுமோ? எவ்வளவோ கட்டுப்பாடு வேண்டும்; எவ்வளவோ உறுதி வேண்டும்; எவ்வளவோ பொறுமை வேண்டும்; நல்ல அடக்கம் வேண்டும். ஆதலால் தான் இவற்றை மேற்கொண்டு நிற்பவனின் நிலையும், அவ்வாறு நிற்பதனால் வருகின்ற நன்மையின் காரணமாக ஏற்படுகின்ற உயர்ச்சியும் மலையிலும் மாணப் பெரிது என்றார்.

* * * *

இன்றைச் சமூகத்தில் சொத்துக்கும் பணத்துக்கும் மதிப்பு உண்டு; மனிதனுக்கு மதிப்பு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழக் கயிறு.

— கா. வேழவேந்தன், பி.ஏ. —

மங்கையவள் மனையரசி யானாள் என்ற
மாற்றத்தின் முத்திரையாம் தாலி! மேலும்
இங்கொருவன் கருவூலம் என்று கூறும்
எழுதாத நறுங்கவிதை தாலி! வீட்டில்
தங்காத கன்னியர்க்குத் தாம்பு தாலி!
தனிமனிதன் உடைமைக்குப் பூட்டு தாலி!
வெங்கொடுமைக் காமுகர்க்குச் செந்தீ தாலி!
வெற்ப்பார்வைக் குறும்பருக்கு நாகம் தாலி!

பூட்டுக்கே உரியவன்தான் வீட்டுக் காரன்;
பொன்வண்ணக் கயிறணிந்தோன் சொந்தக் காரன்
ஆட்டுகின்ற வகையிலெலாம் ஆட்டி வைத்தே
அடங்கென்றே அடக்குகின்ற மகுடி தாலி!
பூட்டுமுன்னர் அவள்பெயரோ கன்னி; இந்தப்
பூட்டறுந்தால் அவள் பெயரோ விதவை! அன்புக்
கூட்டுக்கு வழியமைக்கும் பாச வாயில்!
குங்குமம், பூ, மஞ்சள்தரும் விந்தை வள்ளல்!

கட்டு பவன் தீயனென்றால் இதுதான் தூக்கு;
கட்டுபவன் தூய னென்றால் இதுதான் மாலை;
சிட்டுகளும் இணை இணையாய் வாழும், ஆனால்
திருமணத்தில் தாலிகட்டி வாழ்வ துண்டா?
கட்டுடைய பிடியோடு களிறும் வாழும்;
கழுத்தினிலே தாலியின்றி வாழ்வ தேது!
திட்டமிட்ட இல்வாழ்வில் அன்பு தேவை;
சிந்தித்தால் முழக்கயிறு தேவை தானா?

களவியலில் கருவுற்றாள் மங்கை யென்று
கண்டவர்கள் அலர்தூற்றும் வேளை வந்தே
'உளராதீர்!' எனத்தடுத்து விழிநீர் போக்கும்
ஒப்பற்ற நீதிபதி இதுதான் என்பார்!
கிளை முறிந்தால் மரம் வீழ்தல் இல்லை; ஆனால்
கேடுகெட்ட நாட்டகத்தே கணவன் போனால்
களைந்தெறிவார் தாலியினை; விதவை என்பார்!
கணவனுடன் அவள் உணர்ச்சி செத்தா போகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை.

# நாடற்றவன்.

வேலப்பனுக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லை, எப்படி வரும்? அவன் எதிர்பார்த்திருந்த அத்திருநாள் அவனை எதிர்நோக்கி வரும்போது எப்படித் தூக்கம் வரும்? இந்நந்நாளுக்காக அவன் எத்தனை நாட்கள் வாரங்கள், மாதங்கள் ஏன் பல வருடங்கள் கூடக் காத்திருந்தானே, அத்திருநாள் நாளையே வரும் என்று அவன் கனவு கண்டானா? இல்லை. இல்லவே இல்லை. இவ்வளவு சீக்கிரம் வருமென்று கனவிலும் கருதவில்லையே? அத்திருநாள் நாளையே வந்தால் அவனுக்குத் தூக்கம்தான் வருமா என்ன? வேலப்பனுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடிற்று. எப்போது விடியும் எனக் காத்திருந்தான்.

* * * *

வேலப்பன் சிங்கமுகத் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறிக்கும் ஓர் சாதாரணத் தொழிலாளி. தன் வயிற்றுக்கே லாட்டரி அடிக்கும் ஓர் ஏழைத் தொழிலாளி. இந்நிலையில் அவனுக்கு ஒரு மனைவியும், இரு பிள்ளைகளும் வேறு அப்படியாயின் அவர்கள வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருக்கும்? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்! இப்படியிருக்கையில் அரசாங்கம் வேறு அவர்களைத் துன்புறுத்தியது. ''இந்தியனே வெளியேறு,' 'உனக்கு இங்கே இடமில்லை தாய்நாட்டுக்குத் திரும்பிப் போ' எனக் கோஷமிட்டது அரசாங்கம். நெற்றி வியர்வை நிலத்தில் விழ, அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி காடாகக் கிடந்த மலைநாட்டைப் பாலும் தேனும் பாய்ந்தோடும் ஜீவ பூமியாக்கிய தொழிலாளிக்கு இங்கு இடமில்லையாம், இடம். யாருக்கு இடமில்லை? எங்களுக்கா, உங்களுக்கா? சிந்தித்துப் பார்த்து, சீர்தூக்கிப் பார்த்துச் சொல்லுங்கள் எங்களுக்கா இடமில்லை?

இந்நிலையில் இந்தியத் தோட்டத் தொழிலாளருக்குப் பதில் இலங்கையரைத் தோட்டங்களில் நியமிக்கப் போகின்றார்கள் என்ற வதந்தி வேறு. வேலப்பனைப் போன்ற தொழிலாளிகளின் நிலை? இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவித்தனர். எல்லாவற்றிற்கும் ஓர் முடிவு இருப்பது போல் இக்கஷ்டங்களுக்கெல்லாம் ஓர் முடிவு ஏற்பட்டது.

ஆம் அன்று காலை வேலப்பன் ஒரு கடிதம் கிடைக்கப்பெற்றான். கடிதத்தைக் கண்டதும் மனம் பதறியபடி தனக்குத் தெரிந்த ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளிடம் சென்று கடிதத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னான். அவர், ''வேலப்பா நீ அதிர்ஷ்டசாலி பிரஜா உரிமை பெறுவதற்கு உன்னை வருமாறு அழைத்திருக்கிறார்கள்,'' என்றான். அதைக் கேட்டதுமே வேலப்பன் மகிழ்ச்சிக் கடலில் தத்தளித்தான். அதற் காக அவன் பட்டபாடு கொஞ்சநஞ்சமா? எத்தனை பேரைக் கெஞ்சிக் கூத்தாடி, 'காக்காய்' பிடித்து அவன் பொர்ச்சுக் கடிதம் பெற்றான்? அதன் பின் யார்யாரையோ பிடித்து பத்திரங்களை நிரப்பி அனுப்பினான்.

அவனுக்கு இரட்டை மகிழ்ச்சி ஏனெனில் முதல் தடவை மனுச்செய்தபோது தகுந்த காரணங்கள் கட்டாதபடியால் வேலப் பனுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டதென வந்த கடிதத்தைக் கண்டவுடன் தன் கனவெலாம் கானல் நீர் தானோ என ஏங்கினான். அதற்கு அபயமளிப்பது போல் அன்று காலை மறு பரிசீலனைக்காக வருமாறு கடிதம் வந்தது. எது கையைவிட்டு நழுவியது என்று நினைத்தானோ அது கைகூடி வந்தால் வேலப்பனின் மகிழ்ச்சிக் குத்தான் அளவேது?

அன்றிரவு மூழுவதும் வேலப்பன் இனிய மனக்கோட்டைகள் கட்டினான். மனக்கோட்டைகள் மண்கோட்டைகளாகி சரிந்து விழுமென்று அவன் அறிவானா?

* * * *

பறவை பட்சிகளின் இன்னிசை கதிரவனின் வரவிற்கு கட்டி யம் கூறின. பறவை பட்சிகள் தம் அன்றாட அலுவல்களைக் கவ னிக்கப் புறம்பட்டன.

வேலப்பனும் சீக்கிரமாக எழுந்து, ஏ வேலாயி! இன்னுமா தூங்கற? நல்லாத்தூங்கின போ. மணி என்ன ஆவுது? சீக்கி ரம் எழுந்து கடையாப்பம் ஏதாவது செய். நல்ல நாளுமா. இப்படித்தூங்கறே? எழுந்திரி, எழுந்திரி என எல்லோரையும் எழுப்பினான்,

காலைக் கடன்களை முடித்துவிட்டு இருந்த கந்தைச் சட்டைளில் நல்லதாக ஒன்றைப் பொறுக்கி எடுத்து அணிந்துகொண்டான். பின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் அவ்வாறே செய்வித்தான். பின் எல்லோரும் கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு கிளம்பினர்.

வழியில் எதிர்ப்பட்டோர் ஓரிருவர் ''என்னண்ணே காலங் காத்தாலே எங்கே கிளம்பிட்டீங்க?'' எனக்கேட்டதற்கு, 'கொழும் புக்குப் போறோம். பிரசா உரிமை கொடுக்குறதுக்குக்காக இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிக்கு வரச்சொல்லி இருக்கிறாங்க அதனால் தான்.'' என்றான் புன் சிரிப்புடன் அவர்களும், 'நீங்க கொடுத்துவைத்தவன் அண்ணே! எங்களுக்கும் எப்போது அம்மவராசன் பிரசா உருமை கொடுப்பா னே தெரியலையே,'' எனக் கூறிச் சென்றனர், வேலப்பனுக்கோ மகிழ்ச்சி பிடிபடவில்லை. இருக்காதா பின்னே? அவன்தானே அத்தோட்டத்திலேயே முதன் முதலாகப் பிரசா உரிமை பெறப் போகிறவன்.

சிங்கமுகத் தோட்டத்திலிருந்து புறப்பட்ட பஸ் வேலப்பன் தம்பதிகளை ஏற்றிக்கொண்டு கண்டியை நோக்கி விரைந்தது. மலை யைச் சுற்றி, வளைந்து, வளைந்து செல்லும் பாதைகளையும், பாய்ந் தோடும் காட்டாறுகளையும், மகாவலி கங்கையின் வனப்பு மிக்க தோற்றத்தையும், பச்சைப் பசேல் என செழித்து வளர்ந்த நெல் மணிகளையும் வேலப்பன் தம்பதிகள் வியந்து நோக்கினர்

கண்டியிலிருந்து மீண்டும் கொழும்புக்குப் பஸ் ஏறினர் வேலப் பன் தம்பதிகள். எப்பொழுது கொழும்பு வரும் எனக் காத்தி ருந்த வேலப்பனுக்கு ஆறுதல் அளிக்குமுகமாக 3 மணி நேரத்தில் கொழும்பு வந்து சேர்ந்தது வேலப்பன் தம்பதிகள் ஏறிவந்தபஸ். பஸ்ஸை விட்டு இறங்கிய வேலப்பன் ஏதோ தெய்வ தரிசனம் கிடைத்தது போல் கொழும்பைக் கண்டதும் மகிழ்ந்தான்.

ஒரு வழியாக பிரசா உரிமை கொடுக்கும் கந்தோரை வந்த டைந்தனர் நம் வேலப்பன் தம்பதிகள். அங்கு அவனைப்போலவே நூற்றுக்கணக்கான ஏழைத் தோட்டத் தொழிலாளிகள் இலங்கை யே சதம் என்று நம்பியிருப்பவர்கள் காத்துக்கிடந்தனர் வரிசை யாக பிரசா உரிமை எடுப்பதற்கு.

நேரம் ஆமைபோல் ஊர்ந்து சென்றது. நேரம் ஆமைபோல் ஊர்ந்தது என்றால் கியூவரிசையோ நத்தைபோல் ஊர்ந்தது. ஆயிற்று. இன்னும் ஓரிருவர்தான் அவனுக்கு முன்பிருந்தான். அவர்கள் போனபின் தன் நெடுநாளைய ஆவல் பூர்த்தியாகிவிடும்.

பியூன். ''வேலப்பன்! வேலப்பன்! என இருமுறை உரத் துக் கூவினான். வேலப்பனை அழைத்துக்கொண்டு அவன் அவ் வறைக்குள் சென்றான்.

''உன் பெயர் தானே வேலப்பன்?''

''ஆமாம்.''

''ஊர்?''

''சிங்கமுகத்தோட்டம்.''

''தொழில்?''

''தோட்டத்தொழிலாளி,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டவர்போல் அவனை நோக்கி, ''எங்கே அழைப்புக் கடிதத்தைக் காட்டுங்கள் பார்ப்போம்.''

அழைப்புக் கடிதத்தை நீட்டினன் வேலப்பன். கடிதத்தை வாங்கிப்பார்த்தவர், 'அட இது உமது வீட்டிற்கு அருகில் இருக்கும் கங்காணி வேலப்பனுக்கு அனுப்ப வேண்டிய கடிதம். கிளாக்கரின் தவறுதலால் மாறிவிட்டது. மன்னித்துக்கொள்ளுங்கள். உமக்குத்தான் பிரஜா உரிமை கொடுக்க முடியாது என முன்பே எழுதிவிட்டோமே தவறுக்காக மன்னித்துக்கொள்ளுங்கள். நீங்கள் போகலாம்.'' அதிகாரி தம் கடமையை செவ்வனே நிறைவேற்றினர்.

வேலப்பனுக்கு அழுகை அழுகையாக வந்தது. துயரத்துடன் காரியாலயத்தை விட்டு வெளிவந்தான். முன்பு தெய்வத்தைக் கண்டது போல் மகிழ்ந்தவன் இப்போது ஏதோ நரகத்தைப் பார்ப்பது போல் அருவருப்புடன் நோக்கினன்.

பாதையில் போகும் மக்கள் தன்னை ஏளனத்துடனும் கேலியுடனும் நோக்குவது போல் உணர்ந்தான். ''சீ! இவர்களும் மனிதர்களா? பிசாசுகள்,'' என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்தும் வெளிவந்தது. யார்மேலோ உள்ள ஆத்திரத்தை தன் மக்கள் மேல் காட்டினன். கோபமோ, ஆத்திரமோ வந்தால் தனக்கு பிரியமானவர்மேல்தானே கோபத்தைக் காட்டுவார்கள்.

எங்கோ ஒரு கோவிலின் அந்திகாலப் பூசை மணி ஓசை கேட்டது. அது அவனை 'உரிமை எங்கே?' 'உரிமை எங்கே' என்று கேட்பதுபோல் இருந்தது.

---

உலகத்தில் என்றும் அழியாத இரண்டு உண்மைகள் இருக்கின்றன: காதலும் சாதலும்! காதல் சாதலை வெல்வதனால்தான் ஓயாமல் தீயைக் கக்கும். இந்த உலகத்திலே மனிதன் வாழ்ந்தும், போராடியும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு ஆனந்த கீதம் பாடியும் முன்னேறுகிறன்.

* * * *

உலகத்தில் மனிதனைவிட அவனுடைய படத்துக்குத்தான் மதிப்பு அதிகம்.

* * * *

உலகத்தை ஏமாற்றுவது எளிது; ஆனல் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டு யாரும் சுகப்பட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்துவாய் முரசே !

— தமிழோவியன் —

மலையக மெங்கும் மிளிரும்
மறத்தமி ழினத்தின் வாழ்வு ;
கலையக வாழ்வு என்னும்
கணைபடுங் கலங்கரை விளக்கைத்
தலைவர்கள். பட்டம் பெற்றோர்,
தாங்கு மறியா இழிவைத்
தொலைக்கவே வேண்டும்! அதற்குத்
தொடர்ந்து நீ முயல்வாய் முரசே!

தோட்டத்தில் வெயிலில், மழையில்,
தொழிலாளி யாக உழைப்போர் ;
ஆட்டத்தில் வல்லார் ! நடிப்பில்
அனைவரையும் வெல்வார்! இசைப்
பாட்டினில் கேட்போர் மயங்கும்
பக்குவம் பெற்றார்! இதனை
நாட்டினில் படிப்பி லுயர்ந்தார்
நாளையே அறியச் செய்வாய்

படித்தவர் மேடையில் தோன்றிப்
'படப்பட' என்றால் போதும்;
'நடித்தலி லவரே மேதை
நாடக மிதுவே!'' என்றுக்
கெடுத்துநற் கலையைக் குலைக்கும்
கேவல நிலையைப் போக்கத்
துடித்துநீ முழக்க மிடுவாய் (த்)
துலங்கும் நம்கலை முரசே !

நாடகக் கலையை வளர்க்க,
நடத்திடும் போட்டிச் சிறக்க,
நாடகத் துறையி லுள்ளார்
நடுவண ராவார் ! இங்கோ
ஏடுகள் ஏதோ புரட்டி,
என்னமோ பெற்றாரைக் கூட்டி,
நாடகத் தேர்வு நடத்தும்
ம்மவரைத் திருத்தாய் முரசே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்துச் செயல் வீரர்

# திரு. க. இராமசாமியின் வாழ்க்கைக் குறிப்பு.

பொது நலம் கருதி, தன்னலத்தை மறந்து இருப்பவர். மற்றவர் இன்பம் காண, தன் இன்பத்தைக் குறைத்துக் கொண்டவர்' அறியாமை இருளை அகற்ற அயராது உழைப்பவர். மலையகத்து மக்களின் தளையான வாழ்வகற்றி, நிலையாக வாழச் செய்ய செயல்படும் செயல் வீரர், திரு. க. இராமசாமி அவர்கள்.

இவர் தமிழகத்திலே திரு. கருப்பையா பிள்ளையவர்களுக்கும் தைலம்மை அம்மையாருக்கும் பிள்ளையாக 1932ம் ஆண்டிலே தோன்றினர். இவர் ஐந்து வயதிலேயே பதுளையில் இருக்கும் தர்மதூதக் கல்லூரியில் பாலர் வகுப்பில் சேர்ந்து எஸ். எஸ். சி. வரை நிலையாக அக்கல்லூரியிலேயே கல்வி கற்ருர். 1951ம் ஆண்டு எஸ். எஸ். சி (ஆங்கிலம்) சித்தியடைந்து பாடசாலையை விட்டு நீங்கி தனியாகப் பாடங்கள் எடுத்துப் படித்து ஹோமியோபதி பரீட்சை எழுதி, ஹோமியோபதி மருத்துவர் என்ற பட்டமும் பெற்றவர். இவர் தொடர்ந்து வைத்தியப் படிப்புப் படித்துப் பெரிய பிரசித்தமான மருத்துவராக வரவேண்டியவர். ஆனல் பொதுச் சேவை இவரைத் தடுத்தாண்டு தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது. வைத்தியச் சேவை இவர் அளவில் தோல்வி கண்டு விட்டது. இவர் இராமகிருஷ்ணர் மிஷனில் சிறிது காலம் பொது நல ஊழியராகத் தொண்டு புரிந்தார்.

அங்கு சேவை செய்துகொண்டு இருக்கும் காலையிலே மலையகத்து மக்கள் கல்வி கற்க வசதியற்று வாழ்வில் தோல்வியடைவதைக் கண்டு மனம் வருந்தி, இவர்களுக்குக் கல்வி வசதியளிக்க வேண்டும் என்ற பெரிய எண்ணம் உள்ளத்தில் உதிக்கவே பாரதி கல்லூரி என்ற பெயரில் பதுளையில் 1957ம் ஆண்டு ஜனவரி மீ 17ந் திகதி ஒரு கல்லூரியை ஆரம்பித்து, இதுவரையும் மிக மிக நல்ல முறையிலே இயக்கியும் வருகிருர். அவர் கல்லூரிக்கும் 'பாரதி' என்ற பெயர் பொறித்ததிலேயிருந்து தெரிகிறது அவருடை மெனப்பண்பும் கொண்டுள்ள கொள்கையும்.

1958-ம் ஆண்டு இவர் தோட்டத்தில் உள்ள ஆதரவற்ற பல தமிழ் மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் கிளிநொச்சியில் உள்ள காந்தி நிலயத்தில் இலவசமாக உணவும் உடையும் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கிடைக்கும்படி செய்தார். இன்னும் அவர்களிற் சிலர் கல்வி யும் கற்று வருகிறார்கள்.

இவரின் முயற்சியால் உபகாரச் சம்பள மூலம் மூன்று பேர் யாழ்ப்பாணத்தில் எச். எஸ். சி. (H.S.C.) பயின்று வெற்றி கண்டு தற்பொழுது பேராதனை பல்கலைக் கழகத்தில் B.A. இரண்டாவது வருடமாகப் பயின்று வருகிறார்கள். இவர் மலைநாட்டு மன்னன் திரு இராசன் அவர்களுடன் தொடர்ப்பு கொண்டு மலைநாட்டில் இளைஞர் சங்கம் காண விழைந்தார். மலைநாட்டு நல்வாழ்வு வாலி பர் சங்கமும் கண்டார்கள். அச்சங்கம் வளர வாழ இவர் தன்னை யும் தியாகம் செய்யக் கூடிய மனப்பாங்கு உடையவராக இருக்கின் றார். ம. ந. வா சங்கத்தின் கிளை ஒன்றை பதுளையில் ஆரம்பித்து அதற்கு தலைவராக இருந்து அதை எங்கும் பரப்பி வலிவோடும்— பொலிவோடும் கட்டிக்காத்துக் கொண்டு வருகிறார்.

இவர் "தேயிலைத் தோட்டத்திலே!" என்ற பத்திரிகை ஒன் றைத் தொடக்கி அதன் மூலம் தன் கொள்கையையும் மலைமக்கள் நல்வாழ்வுக்கான நல் வழிகளையும் எடுத்தியம்பி வருகின்றார். மலை மக்களின் பிள்ளைகள் நகரங்களில் படிக்கும் பொழுது தங்க வசதி யின்றி உணவுச் சாலைகளில் தங்கியபடியால் உருப்படியாகப் படிக்க முடியாமல் தவிப்பதைக்கண்டு நண்பர்களைக் கூட்டி தேசிய மாண வர் இல்லம் என்ற பெயரில் ஒரு மாணவர் இல்லம் ஆக்கி அதைத் திறம்படவும் இயக்கியும் வருகிறார்.

இவ்வாறாகத் தான் செய்யும் ஒவ்வொரு வேலைகளையும் மற்ற வர்கள் நன்மை பெறவே செய்கின்றார். எவ்வளவோ துன்பங்கள் இருந்தும். எதையும் தாங்கும் இதயம் கொண்டவராகத் தன் கடமைகளை எல்லாம் இன் முகத்தோடு செய்து வருகின்றார். இல்லற வாழ்வில் ஈடுபட்டால் பொது நலச் சேவையில் தடங்கல் கள் ஏற்படும் என்ற காரணமோ என்னவோ தெரியவில்லை அவர் இன்றுவரைத் தனிக் கட்டையாகவே உழன்று வருகிறார்.

இவர், மலைமக்கள் எல்லோரும் மற்றவர்களைப் போல்எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்று எழில் வாழ்வு காண வேண்டும் என்ற கொள்கையுடையவர். அக் கொள்கையைச் செயல் படுத் துவதிலேயே தன் முழுக் கவனத்தையும் ஈடுசெய்து கொண் டிருக்கின்றார்.

---

தயார் : என் பையனுக்கு இரவில் தூக்கமே வருகிறதில்லையாம். ஏதாவது மருந்து கொடுங்கள்.

டாக்டர்: மருந்து வேண்டியதில்லை. பாடப்புத்தகத்தை எடுத்து படிக்கச் சொல்லுங்கள். உடனே தூங்கி விடுவான்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் பாடலாம்.

— கூயம்பாடி —

பாலும் பழமும் என்ற படத்தில்
பாலும் பழமும் கைகளிலேந்தி என்ற இசை.

கூடை அரிவாளும் கைகளிலேந்தி
குவிந்த மலையில் பொன்நடை சிந்தி
சூழும் குளிரில் தளிர் பெறுவாயே
சோர்ந்த பெண்ணே நீ சொல்வாயே
(கூடை அரிவாளும்)

பாவையே உனை படிக்க வைத்தேனே
பால வயதினில் உழைக்க வைத்தேனே
சூழும் மாதர் உலகை நீ பார்த்தால்
சோர்ந்திடாது நீ செல்வாயே
(கூடை அரிவாளும்)

உழைத்து உழைத்து ஒளி இழந்தாயே
ஊன் உறக்கம் தனைமறந்தாயே
பிழைக்கும் பிழைப்பால் எதைகாண்பாயோ
பிஞ்சுக் கொடியே நீ செல்வாயே
(கூடை அரிவாளும்)

அழைக்கும் கட்சியில் நமக்கொன்றுமில்லை
அடிபணிந்தால் நமக் கோ தொல்லை
படிக்கும் தாளில் பய னென்றுமில்லை
பாவை மணியே நீ செல்வாயே
(கூடை அரிவாளும்)

ஆசிரியர் : கமக்காரன் என்ன செய்வான்.
மாணவன் : உழுவான்.
ஆசிரியர் ; நாய் என்ன செய்யும்
மாணவன் : குரைக்கும்
ஆசிரியர் : அம்மா என்ன செய்வாள்.
மாணவன்: அப்பாவோடு சண்டை பிடிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமுகம் தந்த புதுமை !

மயிரைக் களைந்து முகத்தை அழகுபடுத்தும் கலை, எவ்வளவு காலமாக இருந்து வருகிறது என்று சொல்ல முடியாது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அந்தப் பழக்கம் இருந்திருக்கவேண்டுமென்பது தெரிகிறது. எகிப்திய நாட்டு மக்களுக்கு, கூர்மையான கத்தி கொண்டு மயிரை அகற்றும் முறை தெரிந்திருக்கவேண்டுமென்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. உலகின் பல பகுதிகளில் காணப்படும் பல்வேறு வகையான நாகரிகங்களிலும், மயிரையழித்துக்கொள்ளும் பழக்கம் இருந்தாகத் தெரிகிறது. ஐயாயிரம், ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அந்தப் பழக்கம் தெரிந்திருந்த போதிலும், தற்காலத்தில் உபயோகிக்கும் ''பிளேடு'' முறை ஐம்பது ஆண்டுகளாகத்தான் இருந்துவருகிறது. முதல் சவரப் பிளேடைக் கண்டுபிடித்தவர் கிங் கில்லட் என்பவர்.

கிங் கில்லட் அமெரிக்காவில் புருக்லைன் என்ற இடத்தில் பழைய சாமான்கள் வியாபாரம் செய்பவர். ஏதாவது 'மலிவான உபயோகப்படுத்தப் பட்டதும் எறியப்பட்டு, மீண்டும் வாங்கும்படியான'' ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பது கில்லட்டின் ஆவல். ஒரு நாள் காலை, சவரக்கத்தியைத் தீட்டிக்கொண்டிருக்கும் பொழுது, சவரம் செய்துகொள்ள ''மலிவான'' ஒன்றைக் கண்டு பிடித்தால் என்ன ? என்ற எண்ணம் கில்லட்டுக்கு உண்டானது உடனே அருகிலிருந்த நகருக்குப் போய், பழைய சாமான் கடையில், கடிகாரத்துக்குப் போடும் எஃகுச் சுருள் ஒன்றையும், ஒரு அரம், பித்தளைத் தகடு முதலியவற்றையும் வாங்கிவந்தார். எஃகுத் தகட்டைச் சிறியதாக வெட்டி, ஒரு முனையைச் சாணைபிடித்து, அதை பித்தளைத் தகட்டுடன் பிணைந்து, முதல் ''சவர பிளேடை'' கில்லட் உண்டாக்கினார். அதை ஒரு வேடிக்கைப் பொருளாக அவருடைய நண்பர்கள் கருதினார்களே அன்றி, அது ஒரு வியாபாரப் பொருளாக ஆகும் என்று அவர்களால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. கத்தி, தகடு, முதலியவைகளைப் பெருமளவில் உண்டாக்கும் தொழில் இடங்களுக்குப் போய் தனது கண்டுபிடிப்பை கில்லட் காட்டினார். அந்த வேடிக்கைப் பொருளை பார்த்துவிட்டு, ''இந்தப் பைத்தியக்காரத் தனத்துக்கு எங்களுக்கு நேரமில்லை'' என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். அப்பொழுது இருந்த தொழிலதிபர்களின் நோக்கமெல்லாம் ''நீண்டநாள் வரக்கூடிய உறுதியான'' சவரக் கத்தியை உண்டாக்குவதில் இருந்தது. அதற்கு நேர்மாறாக, ''ஒன்றிரண்டு தடவை மட்டும் உபயோகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு வரும் மலிவான'' சவரத் தகட்டைப்பற்றி கில்லட் பேசியது அவர்களுக்குப் பைத்தியக்காரத்தனமாகப்பட்டது.

மற்றவர்களிடம் போய்சொல்வதில் பயனில்லையெனக் கண்ட கில்லட், தானே ஒரு தொழிற் சாலையை உண்டாக்குவதில் ஈடுபட்டார். அதற்கு ஐயாயிரம் டாலர் தேவைப்பட்டது. அந்த முதலைச் சேகரிக்க கில்லட் பணம் போடக்கூடிய நண்பர்கள், தெரிந்தவர்கள் எல்லோரிடமும் அலைந்தார். ஆறு ஆண்டுகள் விடாப்பிடியாகச் சுற்றியடித்ததில் 20 பேர்கள் அவருடைய தொந்தரவு பொறுக்க மாட்டாமல் தலைக்கு 250 டாலர் முதல் போட்டு கில்லட்டுக்கு உதவினார்கள்.

5000 டாலர் முதல் சேர்ந்ததும், கில்லட் ''சவரபிளேடு'' செய்வதற்கான இயந்திரங்களையும் எஃகுத் தகடுகளையும் வாங்கி, கடைசல் தொழிலில் தேர்ந்த ஒருவரையும் வேலைக்கமர்த்திக் கொண்டார். ஒரு ஆண்டு கழித்து 1903ல் முதல் ''சவர பிளேடு'' தயாரிக்கப்பட்டு, 'விற்பனைக்குத் தயார்' என அறிவிக்கப்பட்டது. பிளேடு விற்பனைக்கு வந்தவுடன் கம்பெனி கடனில் மூழ்கியிருந்தது. வேலை செய்தவர்களுக்குக் கூலி கொடுக்க கில்பர்ட்டிடம் பணம் இல்லை, புதிய 'சவரபிளேடு' முறையை எல்லோரும் ஆவலுடன் பார்த்தார்களேயன்றி, அதை வாங்கி உபயோகிப்பார் யாவரையுங் காணோம், 1903 பூராவும் அமெரிக்கா முழுவதிலும் கில்லட் செய்த பிளேடுகள் மொத்தம் 90 தான் விற்பனையாயின;

கில்லட் கம்பெனிக்கு முதல் போட்டவர்கள் தங்களுடைய பங்குகளை விற்கத் தலைப்பட்டார்கள். போட்டதில் பாதி பணம் கூட கிடைக்கவில்லை. ஒரு நாள் மிகச் சோர்ந்த மனத்துடன் கில்லட் உட்கார்ந்திருந்தபொழுது, சான் சாயுசு என்பவர் தற்செயலாக அந்தப் பக்கம் வந்தார். சாய்சு பெருத்த முதலாளி, ஓயின் வியாபாரத்தால் இலட்சக் கணக்கில் சம்பாதித்தவர். கில்லட்டின் கண்டுபிடிப்பு அவருடைய கவனத்தை ஈர்த்தது. பந்தயக் குதிரைமீது பணத்தை கட்டுவதுபோல, கில்லடடுக்கு உதவிபுரிய சாய்சு முன்வந்து, 60 ஆயிரம் டாலர்களைக் கொடுத்துத் தொழிற்சாலையை விரிவுப்படுத்தி, விற்பனையையும் ஊக்கப்படுத்த ஏராளமான விளம்பரங்கள் செய்தார். இந்தப் புது முயற்சியால், பிளேடுகள் விற்பனை உயர ஆரம்பித்தது. 1903-ல் 90 பிளேடுகள் விற்றதற்கு 1904-ல் 90,844 பிளேடுகள் விற்றன. அதற்கு அடுத்த ஆண்டு 2,76,577 பிளேடுகள் விற்பனையாயின! முதலில் அரைடாலர் மதிப்பிருந்த கில்லட் கம்பெனியின் பங்குகள் இப்பொழுது நூறு டாலர், நூற்றைம்பது டாலர் எனப்பங்கு மார்க்கட்டில் விலை உயர்ந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் 'பைத்தியக்காரத்தனமாகக்'' கருதப்பட்ட கில்லட் ரேசர்-பிளேடுகள் விலை போவதைப் பார்த்ததும், போட்டிக் கம்பெனிகள் ஏராளமாக உண்டாக ஆரம்பித்தன. 1903-ல் கில்லட் கம்பெனி ஒன்றுமட்டும் தததளித்துக்கொண்டிருந்தது போக, 1918ல் மொத்தம் 340 கம்பெனிகள் சவர பிளேடுகள் தயாரிக்கும் தயாரிக்கும் போட்டியில் ஈடுபட்டிருந்தன.

சவர பிளேடுகளுக்கு ஆரம்பகாலத்தில் தரப்பட்ட விளம்பரங்களைப் பார்த்தால் வேடிக்கையாயிருக்கும், ''தன்கையே தனக்குதவி! உங்கள் முகத்தை நீங்களே அழகு செய்யலாம்! இதோ! எங்கள் மார்க் பிளேடுகளைத் தவருமல் வாங்குங்கள்!'' இப்படி ஒரு விளம்பரம் வரும். ' சவரக்கடைகளில் அமெரிக்காவில் உள்ளவர்கள் எல்லோரும் காத்துக்கொண்டிருப்பதால் வீணுகும் நேரம், உழைப்பு, பணம் இவற்றையெல்லாம் மிச்சப்படுத்திஞல், பஞமா காலவாயை நான்கு மணிநேரத்தில் வெட்டி முடித்துவிடலாம்! ஆக, உங்கள் நேரம், உழைப்பு, பணம் மிச்சமாக எங்கள் பிளேடுகளை உபயோகப்படுத்துங்கள்!'' மற்ரெருரு விளம்பரம் போதனை தரும். கில்லட் கம்பெனியார் தந்த விளம்பரம் இன்னும் வேடிக்கையானது. ''வாசிங்டன் அமெரிக்கநாடுகளுக்கு விடுதலையை வாங்கித் தந்தார். கில்லட் அமெரிக்க மக்களுக்கு விடுதலை தருகிருர். ஒருவர் மற்ரேருவரிடம்போய் சவரத்துக்காகக் காத்து நிற்கும் அடிமை நிலையிலிருந்து கில்லட் பிளேடு விடுதலை தருகிறது!''

ஆரம்பித்து மூன்று ஆண்டுகளுக்குள், கில்லட் கம்பெனியின் கிளைகள் இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி, ஆசுத்திரியா, இத்தாலி, நார்வே, சுவீடன், முதலிய நாடுகளிலும் பரவின.

1914–18 சண்டையின் பொழுது கில்லட்டுக்கு ஒரு அபூர்வ யோசனை தோன்றியது. அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி அமெரிக்க போர்வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கில்லட் ரேசர் அரசாங்கம் வாங்கி தரும்படி செய்தார். அதஞல் ஒரே சமயம் 42 லட்சம் கில்லட் ரேசர் விற்கப்பட்டன! அந்த விற்பனையில் மற்ரெருரு அனுகூலம் எதிர்பார்த்துத்தான் கில்லட் அவ்வாறு செய்தார். சண்டை முடிந்து, போர் வீரர்கள் தங்கள் தங்கள் ஊருக்குத் திரும்பிப் போன பொழுது, ஒவ்வொருவர் கையிலும் கில்லட் ரேசர் இருந்தது. இதஞல் ஏராளமான விளம்பரம் வந்து, பிளேடு விற்பனை இன்னும் உயர்ந்தது! இரண்டாவது உலகப்போருக்குப் பின் கில்லட் பிளேடுகளின் விற்பனை இரண்டு மடங்காக உயர்ந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1903 லிருந்து 1950க்குள்ளாக கில்லட் ரேசர்கள் விற்பனை யானவை சுமார் 25 கோடிக்குமேலிருக்குமாம். அந்தக்காலத்தில் விற்பனையான கிலலட் பிளேடுகள் 25000000000 (அதாவது 2500 கோடிக்கு) குறையாமலிருக்கும். கில்லட் கம்பெனி 1903 லிருந்து 1948 வரை மொத்தம் 14 கோடி டாலர் லாபத்தைப் பங்குதாரர்களுக்குக் கொடுத்தது. ஆனல் கம்பெனியை ஆரம்பித்த கில்லட்டுக்கு அதிகப் பலன்கள் கிடைக்கவில்லை. தொழில் வளர வளர, அவருடைய கம்பெனி பங்குதாரர்கள் அவரிடமிருந்த பங்கு களை வாங்கிக்கொண்டுவிட்டனர். கணக்கில் லாபம் வந்து குவிந்த போதிலும், கில்லட் 1932ல் இறக்கும் பொழுது கலிபோர்னியா வில் சில நிலங்கள் பழத்தோட்டங்கள் இருந்ததைத் தவிர அதிக மான சொத்துகள் கிடையாது. கில்லட் கம்பெனியுடன் கில்லட் டின் வாரிசுகளுக்கு எத்தகைய தொடர்ப்பும் இல்லாது போயிற்று. கில்லட்டின் பங்குகளும், கில்லட் கம்பெனியின் நிர்வாகமும் லாப மும், 1903ல் எந்த முதலாளிகள் 'பைத்தியக் காரத்தனம்' எனக் கில்லட்டை கேலி செய்து அனுப்பிஞர்களோ அந்த முதலாளிப் பரம்பரையினர்கள் கையில் போய் சேர்ந்துவிட்டன.

---

# தேயிலை இலைதனிலே!

"ஜெயம்"

தேயிலை இலைதனிலே—பனித்துளி
தெறிக்கும் நிலையினிலே
வாயில்லா தோழர்களின்—கண்ணீர்த்துளி
வடியும் வடிவம் கண்டேன்!

பச்சை இலைதனிலே—பாவையர்
பரந்த மனதைக் கண்டேன்பின்
உலர்ந்த தேயிலையில்—அவர்கள்
உடலும் நானும் கண்டேன்!

பாக்டரி மிஷின்களிலே—வெளிவரும்
பேரிடி ஓசையிலே—
வாக்கில்லா நல்லவர்கள்—குமுறல்
கேகுது ஏயடியோ!

குபுகுபு என்று வரும்—புகையின்
குமுட்டும் காட்சியிலே
குழந்தை குட்டியுடன—நம்மவர்
கும்பி கொதிப்பைக் கண்டேன்!

அட்டையின் நெளிவினிலே—அங்கு
அமர்ந்து இருக்கையிலே
'பிட்டு' ஏழைகளின்—உதிரம்
உறுஞ்சும் உள்ளம் கணடேன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமேல் முழுமையாக உருவாகி விடும் மலையக இலக்கியம்!

— ஆர். எஸ். மணி —

மலையகத்திலே, இன்றைய நிலையில் இலக்கியம் முழுமையாக உருவாகாமல் இருப்பது மிகவும் வருந்தக் கூடியதே! ஆனால், இன்று ஒரளவான வகையில் மலையக இலக்கியம் சற்று வளர முனைந்துள்ளது, போற்றப்படக் கூடியதே!

நம்மிடையே நல்ல பல சிருஷ்டிகளை உருவாக்க எத்தனையோ பேர் இன்று இருக்கிறோம். நம்மால் இனிமேல் முழுமையாக உருவாகிவிடும் மலையக இலக்கியம். இதில் சந்தேகிக்க எதுவுமேயில்லை. முன்பெல்லாம நாமும் படைத்தோம், படைப்புகளை! ஆனால், அவைகள் நமக்கு மட்டுமே பலன் தந்தது. இன்று தோட்டப் பகுதி வாழ் அனைவருக்கும் பலனைத் தருகிறது. காரணம்: அன்று நம்மின் படைப்புகளை ஏற்று வெளியிட ஏடுகள் இல்லை. இன்று ஏடுகள் இருக்கின்றன. 'மலைநாட்டான் மட்டும் சளைத்தவன் அல்ல' என்பதை இன்று நம்முடைய சிருஷ்டிகளின் மூலம் நாம் நிருபித்துக்கொடுக்க வருகிறோம். இந்த நிரூபிப்பு வருங்காலத்தில் மலையக இலக்கியம் முழுமையாக உருவாகி விடும் என்பதற்கு அருமையானதொரு சான்றாகும். மலையக ஏடுகள் நம்மை ஊக்குவிக்க முன்வந்து விட்டன. இனிமேல் மலையகத்திலே மறைந்திருந்த எழுத்தாளர்கள் எல்லாம் அறிமுகமாகி விடுவார்கள்; அவர்களின் படைப்புகள் மலையக ஏடுகளிலே வெளிவரும் என தன் நம்பிக்கைக் கொண்டுள்ளோம். மலைநாட்டாரை உயர்த்த உழைக்கும் ஒரு சில ஏடுகளில் அதிக மதிப்பளிக்கும் ஏடுகள் 'மலைமுரசு'ம் வீரகேசரி'யுமே என்பது வெள்ளிடைமலை!

'மலைமுரசு' மறைந்திருந்த நல்ல எழுத்தாளர்களை அறிமுகப் படுத்தி வருவதுடன், மலையக இலக்கியத்துக்குத் துணைபுரிகிறது. 'வீரகேசரி' எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துவதுடன் மலையகத்தோருக்கு சேவை செய்கிறது.

நம்மின் இலக்கியம் மங்கியிருந்ததற்கு முக்கிய காரணம், மலையகத்தோரை ஆதரிக்க பத்திரிகைகள் இல்லாக்குறையே! இக்குறை இப்போ நீக்கப்பட்டு விட்டது! இனி அஞ்ச வேண்டியதேயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம வளர வேண்டும் என்பதற்காக நாம் படைக்கிறோம்; படைப்புகளை. ஆனால்' அவைகளை நம்மவர் வாசிப்பது குறைவு. இந்த வாசிப்பு மலையகத்திலே என்று அதிகரிக்கிறதோ, அன்று தான் இலக்கியத்தின் ஆக முழுமையான வளர்ச்சியை நம்மால் காணமுடியும் என்பது என் கருத்து. ஆகவே, வாசிப்புக்களையும் வளர்க்க மலையகத்தோர்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கை நம்மிடையே பிறந்துவிட்டது. அவசியம் பிறக்கவும் வேண்டும். இனிமேல் மலையகத்திலே மாண்புறு இலக்கியம் உருவாகிவிட வாசிப்புக் கலையையும் ஒரு அங்கமாகக் கொண்டு செயல் புரிய வேண்டும். இச்செயலால் மலையகத்தின் மங்காத் தன்மையை 'மள மள' வெனக் காட்டி விடலாம்.

மலையகத்தோரே ! இனி உங்களிடம் நல்ல சிருஷ்டிகளைத் தயங்காது சிருஷ்டியுங்கள்; வாசியுங்கள்; பலனடையுங்கள். தன்றாலே, மலையக இலக்கியம் முழுமையாக உருவாகி விடும்.

---

**நாடக மதிப்புரை.**

# பாட்டாளியின் வெற்றி.

**— எஸ். மணிவண்ணன் —**

**'பாசம்'** மறுமலர்ச்சி, தூக்கு மேடை, நாட்டுக்கொரு வீரர், மக்களைக் காத்த மாமன்னன், துளி விஷம் முதலிய இலட்சிய நாடகங்களை அளித்த அக்கரமலை இளைஞர் கலை மன்றத்தினர் தீபாவளித் தினத்தன்று 'பாட்டாளியின் வெற்றி' என்னும் நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

மலையக மக்களின் வாழ்க்கைச் சூழலைப் பின்னணியாக வைத்துப் படைக்கப்பட்ட கதை.

கதையமைப்பு தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைந்திருந்தது.

மேடையமைப்புக்களும் காட்சி ஜோடனைகளும் தரமாக இருந்தன.

நடிகர்கள் பொறுப்புணர்ந்து தங்களுக்கு கொடுக்கப்பட்ட பாகத்தைச் செவ்வனே சித்தரித்தனர்.

வசனங்கள் போற்றும் வண்ணமிருந்தன. நடனங்களும் இடம் பெற்றிருந்தன.

நாடகத்தின் மூலம் மலையகத்து மக்களது விழிப்புணர்ச்சியை தூண்டி அவர்களுக்கு கலையார்வத்தை ஊட்ட முடியும் என்பதற்கு பாட்டாளியின் வெற்றி எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகண்டு . . . .

— தெளிவத்தை சேவியர் —

ரெயில்வே டிப்பார்ட்மெண்ட் லச்சணம் ஏழு மணிக்கு புறப்பட வேண்டிய வண்டி ஏழு இருபதாகியும் இன்னும் காணவில்லை. ஏழு மணிக்கு வண்டி போய் விடும் என்று ஒரு கப் காபி கூட குடிக்காமல் ஓடி வந்ததால் தலையை இலேசாக வலித்துக்கொண்டிருந்தது. வேறு நிலையமாக இருந்தாலும் நேற்று போட்ட காப்பியை சரி சூடாக்கிக்கொண்டு வந்து காப்பி; காப்பி; என்று கத்திக் கத்திக் கொண்டிருப்பார்கள். பதுளை நிலையத்தில்தான் அதுவும் கூட கிடையாதே என்று பலவாறு எண்ணிக்கொண்டு கோணமற்ற வட்ட வடிவமான என் கை கடிகாரத்தை பார்த்தபடியே அமர்ந்திருந்தேன்.

'அதோ ! வண்டி வந்து விட்டது' சனங்களிடையே ஏற்பட்ட சல சலப்பு காரணமாக என் பார்வையை 'லைன்' பக்கம் வீசினேன். துணை இருப்புக் கோடுகளை நீவிக்கொண்டு தனக்கென்று வகுத்த நேர்க்கோட்டில் வண்டி அதிகவேகமாக வந்துகொண்டிருந்தது. பிரயாணிகள் இறங்கிய பின் வண்டியை லைன் மாற்றி போட்டார்கள். ஒரு பெட்டிக்குக் கூட போதுமான பிரயாணிகள் கிடையாது என்றாலும் முட்டி மோதிக்கொண்டு நான் . . . நீ என்று ஏறினார்கள். 'மறந்துடாம கடதாசி போடுங்க அவங்களை ரொம்பக் கேட்டதாகச் சொல்லுங்க' 'ஆடிப்பதினெட்டுக்கு ஒரு முறை மகளையும் கூட்டிவாங்க ஆடி பூசைக்கு குடும்பத்துடன் இருக்கனும்' 'பெட்டி பத்திரம் குழந்தை பத்திரம்' இப்படி எத்தனையோ குரல்கள் விடைபெற்றன. அப்போது தான் யார் யார்? அந்த பெட்டியில் இருக்கின்றனர் என்று ஒரு நோட்டம் விட்டேன். நூல் வேஷ்டியில் ஜரிகை இழைப்பதாற் போல இந்த மூன்றும் வகுப்பு பெட்டியுள்ளும் நாகரிக இழைகள் இழைந்தன

வண்டி இன்னும் புறப்படவில்லை. முதல் மணி அடித்து விட்டது. சிறுது நேரம் கழித்து வண்டியும் ஊதியது. சக்கரங்கள் உருண்டன வண்டி நகர்ந்து விட்டது. இச் சமயத்தில் மேல் துண்டு நழுவித் தரையில் விழ; குடுமி கட்ட விழ்ந்து பறக்க; தலைப்பாகை ஒரு பக்கம் தொங்க; வேஷ்டியின் தலைப்பை பிடித்துக் கொண்டு இரைக்க இரைக்க ஓடிவந்து நான் இருந்த பெட்டியில் ஏறினார் ஒருவர். 'நெடு நெடு' வென்று ஒற்றை நாடியான உருவம். முகத்தில் இங்கொன்று அங்கொன்றுமாக சில மயிர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவி ஏறிய சட்டை; அதற்கு மேல் வெற்றிலைக் கறைபடித்த கோட் அதில் சங்கிலியில் கோர்க்கப்பட்ட ஒரு 'ஹைதர் காலத்து' கடிகாரம். அழுக்கடைந்த துணிப்பையும் அவர் கையில் இருந்து அழகு செய்தது. அவர் உடையைக் கண்ட சிலர் முகத்தைச் சுளித்தார்கள். வந்தவர் தனக்கு ஒரு இடம் பிடிக்காமல்; என்ன இன்று வண்டி ஏழு மணிக்கு பத்து நிமிடம் இருக்கவே புறப்பட்டு விட்டது என்று சொல்லிக் கொண்டு தன் கோட்டில், சங்கிலியில் கோத்தக் கடிகாரத்தை மெல்ல வெளியே இழுத்துப் பார்த்தார். அடேயப்பா கடிகாரமா அது ஹைதர் காலத்து தொப்பி மாதிரி. அவ்வளவு பெரிது. அந்த கடிகாரம் ஆறு ஐம்பத்தைந்தை காட்டிக் கொண்டிருந்தது. அதை திரும்பவும் அது இருந்த இடத்தில் வைத்து விட்டு இடது பக்கம் திரும்பினவர் சட்டென்று தன் தலைப்பாவை எடுத்து கம்கட்டில் வைத்துக்கொண்டு 'செலாங்க ஐயா' என்று ஒரு கூளகும்பிடு போட்டார். அங்கு ஒரு தம்பதிகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த வகையில் கணவனும் மனைவியும் என்பது நன்கு தெரிந்தது. யார் இந்த தோட்டக்காட்டான் டாலிங்' என்று தன் கணவனை பார்த்து ஆங்கிலத்தில் கேட்டாள் அவள். 'எனக்கா தெரியும் இந்த தோட்டக்காட்டு பயல்கள் இம் மாதிரிதான்; கால் சட்டை காரனைக் கண்டால் 'செல்லாங்க ஐயா' என்பானுக. இது உனக்கு தெரியாது' என்று தன் மனைவியின் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் சொன்னார். இதை கேட்டதும் என் காதில் நாராசம் புகுவது போல இருந்தது. வந்தவர், ஒரு நாகரிகமாக உடை அணிந்திருந்த ஒரு சிங்களவர் அமர்ந்திருந்த இடத்தில் சென்று அமர முயலும் போது அவர் 'அடே! தரையில் குந்துடா; உனக்கும் வேறு சீட்டா?' என்று எரிந்து விழுந்தார். வந்தவர் அதை அலட்சியம் செய்யாமல் என் அருகில் வந்து அமர்ந்தார்.

தமிழனை புகழ வேண்டிய சிங்களவர்களா இன்று இப்படி மிருகத்தனமாகத் தமிழ் மக்களைத் தாக்குகின்றனர், கும்பிடும் கை தானே கொலையும் செய்கிறது. காய்கறி வெட்டும் கத்தி கையை வெட்டியதென்றால் கத்தியின் குற்றமா அது? பயன படுத்தும் கையின் குற்றம் அலவா ... இவ்வாறு பல எண்ணங்கள் என் மனத் திரையில் மின்னி மறைந்தன. என் அருகில் அமர்ந்திருந்தவரை. பார்த்தேன்; அவர் மடித்து கட்டிய வேஷ்டியை கூட அவிழ்த்து விடாமல் அப்படியே அமர்ந்தார். 'ஐயா அந்த வேஷ்டியை அவிழ்த்து விட்டு அமருங்கள்' என்றேன். அவர் எழுந்து வேஷ்டியை அவிழ்த்து விட்டு அமர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசித்துக்கொண்டிருக்கும் மின் விளக்கில் சில விட்டில் பூச்சிகள் முட்டி மோதிக்கொண்டு அலைவது போல புதுத்தம்பதிகளை யும் வந்தவரையும் பற்றிய எண்ண அலைகள் என் மனதில் அலைந்து கொண்டிருந்த போது அதைப் பற்றி அறிய ஆவலுடையவனாய் முகத்தை அவர் பக்கம் திருப்பி: சாரளங்களுாடே இருட்டிலே மின் பூச்சு போன்று மின்னி மின்னி தோன்றி மறையும் ஒளிகளை பார்த்துக்கொண்டிருந்தவரை பார்த்து 'ஐயா நீங்கள் எந்த தோட்டத்தை சேர்ந்தவர்?' என்று ஒரு கேள்வியைக் கேட்டேன். நான் இருக்கும் நிலையை வெளிப்படுத்த விரும்பாது கண்களை கசக்கிக் கொண்டு; யார்? நானா? 'நான் கட்டவளையைச் சேர்ந்த வன். என்றார். நான் அத் தம்பதிகளை கண்ணால் சுட்டிக் காட்டி; 'யார் அவர்கள்?' என்று பொதுவாகக் கேட்டேன். 'அவுங்களை கேட்கிறிங்களா?' என்று கையை நீட்டி சுட்டிக் காட்டு முன் அவர் கையை தடுத்தேன். அவர் சமாளித்துக்கொண்டு; 'அவரு எங்க தோட்டத்து பெரிய கிளாக்கரு அவுரு பாருங்க ஒரு சுத்த தமிழன். என்னமோ 'லவ் மெரேஜ்' என்பாங்களே அப்படி இவர் இந்த 'சி' புள்ளியை கட்டிக்கிட்டாரு. இப்ப மாமா வீட்டுக்கு கொழும்பு போறாங்க போல இருக்கு, என்று நான் கேட்காத கேள் விக்கெல்லாம் தமிழல்லாத நடையில் பேசி முடித்தார்' முதலில் இந்த ஆளை தெரியாது என்று கூட்டுககாரர் கூறியதன் மர்மம் எனக்கு விளங்கியது. 'உங்க தோட்டத்து ஆளா இம்மாதிரி அநாகரிகமாக இருக்கிறான்' என்று மனைவி கேட்டுவிடுவாளென்று தனக்கு தெரியாது என்று கூறிவிட்டார் போலும். 'நீங்க எங்கே போரீங்க?' கட்டவளையில் என்ன செய்கிரீங்க?' என்று இரு கேள்வியை போட்டேன். 'மக சந்தியாவிலிருந்து வருது. அதை கூட்டிகின்று வர போல்காவலை போரேன்' என்று இழுத்தவர் முடிக்காமல், 'கட்டவளையிலாங்க? என்ன வேலென்றா? கேட் டீங்க? 'நான்தான் பெரிய கங்காணி' என்று பெருமிதத்துடன் கூறினார். வண்டியின் வேகம் குறையவே, வண்டி ஹாலியலையை அடைந்து விட்டது என்று தெரிந்தது

வண்டி நகர்ந்தது. நான் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தேன். 'ஐயா நீங்கள் வயதில் மூத்தவர். நான் சொல்கிறேன் என்று கோபப்படாதீர்கள். ஒரு பிரயாணம் செய்யும் போது ஒரு நல்ல உடையாக அணிந்து கொண்டு போனால் என்ன? 'கந்தை ஆனா லும் கசக்கிக் கட்டு' என்ற பழ மொழியை நீங்கள் அறிந்ததில்லை யா? நீங்கள் ஒரு பெரிய கங்காணி. அதோ; அந்த சிங்களவரைப் பாருங்கள். அவர் யார் தெரியுமா? பதுளை பட்டினத்தில் மூட் டை தூக்குபவர், அவரை இப்போது யாரும் பார்த்தால் மூட்டை தூக்குபவர் என்று சொல்ல முடியுமா? அவனுடைய உடையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், தலை சிலவையும், சாரத்தையும் பார்த்தால் ஒரு தோட்டத்து பெரிய கங்காணி மாதிரியல்லவா இருக்கிறன். வேலை செய்யும் போது ஒரு உடையும் பிரயாணம் செய்யும் போது ஒரு உடையும் வைத்திருக்கிருன். இது போலவே நீங்களும் செய்தால் தோட்டக் காட்டான் என்று சொல்ல மாட்டார்க்கள் அல்லவா? உங்களை போல பெரிய மனிதர்கள் முன்மாதிரியாக இருந்தால் தானே உங்களுக்கு கீழே வேலை செய்யும் கூலிகள் உங்களைப் பார்த்து திருந்துவார்கள். தோட்டக்காட்டான் என்ற சொல்லும் நம்மைவிட்டு மறையும் என்று மூச்சு விடாமல் பேசி முடித்தேன். இரவு நடுச் சாமத்தைத் தாண்டி விட்டது. குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. கும்மிருட்டை கிழித்துக்கொண்டு அந்த ரெயில் வண்டி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எனக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. ஓரிரு நிமிடங்களில் தூங்கிவிட்டேன். கண் விழித்து பார்க்கும் போது அவரைக் காணவில்லை. அபபோதுதான் வண்டி போல் காவலையை தாண்டி சென்று விட்டது என்பதை உணர்ந்தேன். அன்று ஞாயிறு. காலை நேரத்திலேயே வெயில் உக்ரமாகத் தகித்துக் கொண்டிருந்தது. கோடை வருவதற்கு இன்னும் நாள் இருக்கிறது அதற்குள் என்ன அவசரம்? இது என்ன கேள்வி. யாருக்கு அவசரம்? சூரியனுக்கா? என்று பல்வேறு கேள்விகள் என் மனதில் எழுந்தது. வடக்கு கிழக்காக நீண்டு கிடந்த பதுளை வீதியில் என் கால்கள் நடந்து கொண்டிருந்தன. வெயில் உக்ரத்தை ஒரு ஐஸ்கிரீம் குடித்து குறைக்க எண்ணி 'சல்காதை' அடைந்தேன். உள் சென்று ஒரு இடத்தில் அமர்ந்தேன். என்ன 'சார்' வேண்டும் என்று கேட்டபடி ஒரு சர்வர் என்னை அனுகினன். 'ஒரு ஐஸ்கிரீம்' கொண்டுவா' என்றேன். பின் கைகுட்டையை எடுத்து முகத்தில் அரும்பி இருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு ஹோட்டலை ஒரு நோட்டம் விட்டேன். நான் இருந்த இடத்தில் இருந்து மூன்று நான்கு மேசைக்கப்பால் ஒரு தம்பதிகள் சர்வரின் வரவுக்காக காத்துக்ொண்டிருந்தார்கள். அவர்களை எங்கோ கண்டமாதிரி இருக்கிறதே! எங்கு என்று சிந்தனையில் மூழ்கினேன்.

'டங்' என்று 'ஐஸ்கிரீம்' வைத்த சர்வர் என்னை இவ்வுலகிற்கு கொண்டு வந்தான். ஒரு கரண்டியை எடுத்து சுவை பார்த்தபடி அவர்கள் பக்கம் திரும்பினேன். அங்கே நெடு நெடு வென்று வளர்ந்த ஒற்றை நாடியான உருவம் ஒன்று அவர்கள் நோக்கி வந்து கொண்டிருந்தது. ஆம்! அன்று ரெயிலில் பார்த்த அதே உருவம்தான். ஆனல் பல வித்தியாசங்கள். அன்று அழுக்கு காவி ஏறிய வேஷ்டி. இன்று பள பல வென்று மின்னும் பட்டு வேஷ்டி. கழுத்திலே ஒரு மைனர் சங்கிலி. குடுமி இல்லை; அழகிய கிறப்; சட்டைப் பையிலே ஒரு பௌண்டென் பேனு. கையிலே கடிகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அந்த சங்கிலி கடிகாரத்தையும் கோட்டையும் காணவில்லை. என் காலில் செருப்பு. அன்று கண்ட மனிதரே இன்று இப்படி. என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. இதற்கிடையில் அவர் அத் தம்பதிகள் இருந்த இடத்திற்கு வந்து விட்டார். வந்தவர் எஞ்சாண் உடம்பையும் ஒரு சாணாக ஒடுக்கி 'செலாங்க' என்று சொன்னார். 'செலாங் கணபதி, எப்படி சுகம்' என்று ஒரு கேள்வியை போட்டார். 'உங்க புண்ணியத்திலே நல்ல சுகம்' என்று வந்தவர் முடிப்பதற்குள் 'யார் ?' இந்த மனிதர் டாலிங்' என்று ஆங்கிலத்தில் கேட்டாள் அவள். இதற்குள் எனக்கு இத்தம்பதிகள்தான் அன்று றயிலில் கண்டவர்கள் என்பது தெரிந்து விட்டது. அன்று 'யார் இந்த தோட்டக்காட்டான்' என்று கேட்ட வாய் இன்று யார் இந்த மனிதர் என்று கேட்கிறது. காரணம் உடை. 'இது தெரியாதா ? நம்ம தோட்டத்து பெரிய கங்காணி இவர் தான்' என்று மனைவிக்கு ஆங்கிலத்தில் பதில் அளித்தார். அன்று இவனை எனக்கு தெரியாது என்று சொன்னவர் இன்று அவனையே சொந்தம் கொண்டாடுகிறார். அவர்கள் இருவரும் ஆங்கிலத்தில் கதைக்கவும் 'நான் வரேனுங்க' என்று மெதுவாக மேலே நடந்தார். வந்தவர் நான் இருந்த மேசையின் அருகில் வந்து நின்று கொண்டு சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்து விட்டு என்ன நினைத்தாரோ தெரிய வில்லை; நான் இருந்த மேசையருகில் கிடந்த கதிரையில் எனக்கு எதிரே அமர்ந்தார். ஒரு சர்வரை பார்த்து ஒரு 'லைபிட்டீ' கொண்டுவா என்று சொல்லிவிட்டு என் பக்கம் திரும்பினார். திரும்பியவர் என்னை அடையாளம் கண்டு கொண்டார். 'அட ! தம்பியா எப்படி சுகம்' என்று குசலம் விசாரிக்க தொடங்கி விட்டார். நான் அவருக்கு பதில் சொல்லிக் கொண்டு 'ஐஸ்கிரீமை' சுவை பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் தொடர்ந்தும் பேசினார்; தம்பி நீங்கள் தான் எனக்கு நாகரீகம் என்னும் கதவை திறந்து விட்டீர்கள். உங்களைப் போலவே படித்தவர்கள் 'எல்லோரும் ஆளுக்கு ஒருவரை திருத்தினால் தோட்டக்காட்டான் என்னும் பெயர் மறையும்' பேசிக் கொண்டே தேநீரையும் குடித்து முடித்தார். பின், தம்பி எனக்கு பல அவசர காரியங்கள் இருக்கிறது. நான் வருகிறேன் என்று என்னிடம் விடை பெற்று திரளான சனக் கூட்டத்தில் ஒரு துளியாக மறைந்தார்.

---

அதிகாரி ; உன் மகன் பிறந்தது எப்போது. நாட்டுபுறத்தான். முதன் முதல்லெ பெரிய காத்து அடிச்சுச்சங்களே அன்னைக்கு பொறந்தாங்க.

அதிகாரி ; ? ? ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயவர் வாழ் எங்களூர்.

— என். நடராஜா —

பொருப்புண்டு எங்களூரில்
பொறுதவர் பலருண்டு
பொறுப்பின்று யாவருக்கும்
பொச்சரிப்பே சிறப்பு பெறும்,
பொல்லாத எங்க ளூரை
போற்று வரோயாருமில்லை
சொல்லாமல் இருப்பதற் கோர்
சொகுசுண்டோ ? அதுவுமில்லை

செட்டியார் பலரிருப்பர்
செக்குடனே செல்வர் சிலர்
பெட்டியார் வயிறு புடைப்பார்
பேதையுள்ளம் படபடக்க!
கிட்டியின் விடம் போன்ற
தீங்கிலைக்கும் வரிபோன்ற
வட்டிப் பேய் விட்டதில்லை
செட்டி வாழ் எங்களூரில்

சட்டைப்பை நிறைந்திருக்கும்
சம்பள நாள் பத்துஅதில்
மொட்டைப் பை காட்சிதரும்
மொக்குடைய சேதிவரும்
தட்டை குளம் ஏகிடுவர்
குடும்பக் கலை மறந்து
கட்டை மட்டும் விடுவரும்
கயவர் வாழ் எங்களூரில்.

---

தாய் : அந்த கோப்பையிலுள்ள சாப்பாட்டை, மட்டும் தின்று விடாதே.

குஞ்சு : ஏன் அம்மா.

தாய் : அது காச நோய்காரன் சாப்பிட்ட மிச்சம். அதைச் சாப்பிட்டால் உனக்கும் காச நோய் தொற்றிக் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்மையின் வெற்றி—(8ம் பக்க தொடர்ச்சி)

கண்டக்:- குட் ஈவினிங் ஸார்!

சின்னதுரை:- குட் ஈவினிங் மிஸ்டர் எண்டனி! என்னப்பா நம்ம திரிச்ச கயிறெல்லாம் சரியாயிடுச்சே.

கண்டக்:- அதுக்கு வேற ஆச்சேபனையா?

சி. துரை:- அந்த ஒட்டுப்பாலு எல்லாம் எங்கயிருந்து எடுத்தே?

கண்டக்:- அதுவா 'பெக்டரி'யில இருந்து முனுசாமி மூலமா எடுப்புவிச்சி நம்ம வீட்டில இருந்த பெட்டியில அடப்பிச்சி வேலுகிட்ட கொடுத்திட்டேன். முனிசாமிகூட ஐந்து ரூபா கேட்டான் ஸேர்!

சி. துரை:- குடுத்தியா...?

கண்டக்:- குடுப்பேனு ஸேர்?

சி. துரை:- ஸ்டொப்மேன்! அங்கதானே இருக்கு மிஸ்டேக்கு?

கண்டக்:- ஸேர்! இந்த எண்டனி அதுக்கெல்லாம் எடம்வைக்க மாட்டான்.

சி. துரை:- மிஸ்டர் எண்டனி, நீங்கதான் விட்டாலும் நான்தான் விடுவேனு?

கண்டக்:- அதுதானே ஸேர்!—நம்ம ஆபிஸ்ல ஏதும்...

சி. துரை:- அதுக்கெல்லாம் எடமில்லே! அவங்க எல்லாம் நம்ப கைப்பொம்ம, [இவ்வேளை வேலுவின் தம்பி பாலு வருகிறான்] [பாலுவைக் கண்ட சின்னதுரை]

சி. துரை:- ஹூ ஈஸ் தெட் (ச்) செப்?

பாலு:- குட் ஈவினிங் ஸேர்!

சி. துரை:- குட் ஈவினிங்! நீ யார்?

பாலு:- நான் வேலுவின் தம்...பி!

சி. துரை:- ஓ! ஐஸி, அவன்ட தம்பியா நீ? நீ கொழும்புலப் படிக்கிறதாகக் கேள்விப்பட்டேனே!

பாலு:- எஸ் ஸேர்! எங்க அண்ணன் விஷயமாக...

கண்டக்:- பேச வந்திருக்கியாக்கும். இதுல என்னப்பா பேச இருக்கு!

சி. துரை:- அதுதானே! தொழிலாளி உன் அண்ணன், பணக் கஷ்டத்தால் கஷ்டப்பட்டான் — களவெடுத்தான்! குற்றம் செய்தவன் தண்டனையை அனுபவிச்சுதான் ஆக வேண்டும். என்னால எதுவுமே செய்ய முடியாது!

பாலு: [கோபத்துடன்) மு டி யா தா...? தொ ழி லா ளி தானேன்னு தூர வச்சுப் பேசுறீங்க! அப்ப சரி நான் போய் பெரிய துரையைச் சந்திக்கிறேன். [போகிறான்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. துரை:- சோ . . . யூ வில் ட்ரை ! மிஸ்டர் எண்டணி யூ மே யார் புலீ ! [சி. துரை போகிறூர்]

கண்டக் :- போரான் ஸார் பொடிப்பய !

[கண்டக்டர் யோசனையாக மெதுவாக நடக்கிறூர். அந்நேரம் பாட்டுச் சத்தம் கேட்கிறது]

['ஆண்டவன் படைச்சான் எங்கிட்ட கொடுத்தான் அனுபவி ராஜான்னு அனுப்பி வச்சான் !'—மதுவின் மயக்கத்திலே பாடல் பாடிக்கொண்டு வீரப்பன் வருகிறுன்]

கண்டக் :- டேய் வீரப்பா !

வீரப்பன் :- யாருடா அவன் . . . ? (திரும்புகிறுன்)

கண்டக்:- வீரப்பா !

வீரப்பா:- ஐயாவா, சலாங்கய்யா!

கண்டக்:- உன்னுல ஆகக் கூடிய ஒரு காரியம் எங்கிட்ட தங்கி யிருக்கு.

வீரப்பா:- அது என்னுங்க.

கண்டக்:- வீரப்பா செலவுக்கு ஏதும் சல்லியிருக்குதா ? இந்தா ஐந்து ருவா. வீரப்பன் பணத்தை வாங்கிச் சட்டைப் பையுள் வைக்கிறுன்]

கண்டக்:- வீரப்பா ! அந்த வேலுப்பய தம்பி பாலு இருக்கா னில்ல, அவனே இன்னிக்கு கொன்னுபுடு.

வீரப்பா:- ஐயய்யோ ! என் கொல்லனும் ! பாலு தம்பி ரொம்ப நல்லவனுச்சே. எனக்கேலாது. இந்தாங்க ஒங்க சல்லி [பணத்தை எடுத்துக் கொடுக்கிறுன்]

கண்டக்:- நான் ஒரு வழியில போறு, நீ ஒரு வழியிலவாரியே ! [கூறிய வண்ணம் இன்னும் பத்து ரூபாவை அவன் கையில் வைக்கிறூர் கண்டக்டர்].

(அடுத்த இதழில்)

எதிர்பாருங்கள் ! எதிர்பாருங்கள் !!

**புரட்சிக் கமால் கவிதைகள் !**

இன்றைய தமிழ் கூறும் நல்லுலகம் தந்த சிறந்த கவிஞருள், ஈழத்து முஸ்லிம் கவிஞர்களுள் முதல்வருமான

**கவிஞர் புரட்சிக் கமால்**

அவர்களின் ஆயிரக்கணக்கான கவிதைகளிலிருந்து திரட்டிய தொகுப்பு. இலக்கிய சுவைஞர்கள் அத்தனைவர்களாங்களிலும் திகழ வேண்டி அரிய படைப்பு,

வெளியீடு :— இக்பால் பதிப்பகம்.

விற்பனை முழு உரிமையாளர்கள் :—

**முஸ்லிம் ஹோட்டல் புத்தக நிலையம், கண்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org